சுவாமி ஞானப்பிரகாசரின்
சுவிசேஷசத் தொண்டு
1901 – 1926

– தா. எ. சின்னப்பு

924
சின்ன

# FR. GNANA PRAKASAR

AND HIS

# MISSIONARY LABOURS.

சுவாமி ஞானப்பிரகாசரின்

# சுவிசேஷத் தொண்டு.

1901 — 1926.



அவரது இரசத யுபிலி

ஞாபகார்த்தமாய்

ஞா. எ. சின்னப்பு இயற்றியது.

924
சின்ன

ணம், ாவலர் அச்சுக்கூடம்.

1926.

# FR. GNANA PRAKASAR

AND HIS

# MISSIONARY LABOURS.

## சுவாமி ஞானப்பிரகாசரின்

# சுவிசேஷத் தொண்டு.

1901 — 1926.

அவரது இரசத யுபிலி

ஞாபகார்த்தமாய்

சூ. எ. சின்னப்பு இயற்றியது.

யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடம்.

1926.

THE EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE LIBRARY
COLOMBO




*Photo by A. W. & Co.*

சுவாமி S. ஞானப்பிரகாசர், O. M. I.

# சுவாமிஞானப்பிரகாசரின்

# சுவிசேஷத் தொண்டு.

இச்சிறு நூலுக்கு விஷயமாயுள்ள சுவாமிஞானப் பிரகாசரின் இருபத்தைந்து வருடகால சுவிசேஷத் தொண்டைஎடுத்துச் சுருக்கமாய்வரையுமுன் இவர்குருப் பட்டம் பெற்று இத்திரு உத்தியோகத்தில் அமருமுன் உள்ளதாகிய இவரது சீவிய வரலாற்றின் சுருக்கத்தையும் இங்கு காட்டவேண்டியிருக்கிறது. ஆதலால்,

## சுவாமியாரின் இளம்பிராயம்

என்ற தலைப்பின்கீழ் சிலசொல்லுவோம். கல்வி செல்வம் நாகரீகங்களில் அன்று தொட்டு யாழ்ப்பாணத்தின் சிரோ ரத்தினமாய் விளங்கிய மானிப்பாயிலே, விடைக்கொடி யுடைய ஆரியர் குலத்து அரச மடப்பளிப் பிரபுக்கள் மரபினராகிய புவிராசசிங்கக் குலசேகரமுதலியார் வழித் தோன்றலாகிய ஸ்ரீமான் சாமிநாதபிள்ளை உபாத்தியா யரதும், மேற்படியூர் ஸ்ரீமான் காடினர் சிற்றம்பல உபாத் தியாயரது புத்திரி ஸ்ரீமதி தங்கமுத்துவினதும் தனயராய் சுவாமி ஞானப்பிரகாசர் 1875-ம் வருடம் ஆவணிமாதம் 30-ம் தேதி பிறந்தார்.

பிள்ளை என்றுஎல்லோரும்அன்பாய்அழைத்துவரும் சாமிநாதபிள்ளை, சைவசமயத்தில் அதிக பத்திமானும், தம்முறைவிடமாகிய நவாலிக்குறிச்சிக்கு ஓர் நாட்டாண் மைக்காரனும், ஏழைகளை ஆதரிக்குங் கொடைவள்ளலு மாய் விளங்கினார். தமது மாமனாரும் காடினர் சிற்றம்பலம்

ஆனைக்கோட்டையில் ஓர் ஆங்கில வித்தியாசாலைக்கு அடியிட்டது போல, இவரும் மானிப்பாயின் பிரதம ஆங்கில வித்தியாசாலைக்கு அடியிட்டவர். தங்கமுத்து அக்காலம் அருமையாகவே கல்வியூட்டப் பட்டிருந்த பெண்களுள் அருமையான கல்வியும் நாகரீகமுங் கொண்ட ஒருமாது. தான் புரோட்டெஸ்தாந்த பள்ளிக்கூடத்திற்படித்தகாலந் தொடக்கம் இம்மதச்சார்புகொண்டொழுகிய ஓர் நேர்மை வாய்ந்த உத்தமி. சைவப்பழமாகிய சாமிநாதபிள்ளை தமக்கோர் ஆண்குழந்தை பிறந்த அகமகிழ்ச்சியினாற் சோதிடரை அழைப்பித்துவிதிப்பிரகாரம் சாதகங்கணிப்பித்துப் பிள்ளைக்கு "வைத்தியலிங்கம்" என்ற நாமஞ் சூட்டுவோராயினர். இனசனர் இவர்க்கு அலங்காரம் பொருந்திய "கனகரத்தினம்" என்ற பெயரை இட்டுஅழைக்கலாயினர். சுவாமியாரது இருமரபினரும் கல்விக் களஞ்சியங்களாயும் செல்வப்பிரபுக்களாயும் இருந்தார்களென்பதை இவரது சொந்தக் கல்விச் சிறப்பும் குணச்சிறப்பும் நன்கு துலாம்பரமாக்குகின்றன.

யேசுநாதசுவாமி தமது சீடருக்குத் திருவாய் மலர்ந்தருளியபடி, "தன் தாயுதரத்திலிருந்து உதிக்கும்போது அண்ணகராய்ப் பிறக்கிறவர்களுமுண்டு. மனிதர் நிமித்தம் அண்ணகராகிறவர்களுமுண்டு. தங்களை இடையே அண்ணகராக்குகிறவர்களுமுண்டு" என்றதுபோல பாலவயதிலே தானே இவர் தேவஊழியத்துக்காகக் குறிக்கப்படலானார். இரண்டு மூன்று வயசுக்கிடையில் இவருக்கோர் கடுமையான சுரங்கண்டு 40 நாட் சன்னிகொண்டு இரத்தமயமாய்ச் சலம்போவதையும் வைத்தியர் திகைப்புறுவதையும் கண்ட இவரது தாயார், சைவசமயியாயினும்வைபிள் வாசித்தறிந்த உத்தம பத்திசாலியானபடியால், இப்பிள்ளை பிழைத்திருந்தால் தேவனுக்கே ஊழியம்புரிய (புரோட்

டெஸ்தாந்த போதகராய்ப்) போகவிடுவதாய் நேர்த்திக் கடன் செய்தார். இதன்பின்னர் நோயும் படிப்படியாகக் குணப்பட்டுப் பூரணசவுக்கியம் உண்டானது. அதற் கிடையில் பேதிநோய் காரணமாய்த் தந்தையார் இறந்து போயினர். அவர் இறக்குமுதல் தம் ஆஸ்தி பாஸ்தி முழு வதையும் தம்சகோதரன், வொல்காட்பிறதேவ் கொம்பனி லிகிதர், ஸ்ரீமான் இ.பொன்னம்பலமவர்கள்பேரில்விட்டிரு ந்தமையால் அவற்றைஇப்புத்திரனுக்குஎழுதிக்கொடுத்து விடும்படி அத்தருணம் வைத்தியஞ் செய்த டக்றர் தம்பி முத்து அவர்கள் சாட்சியுடனெழுதி அனுப்ப, அவரும் அப்படிச் செய்வதாகச் சுவாமியாருடைய தாயாருக்கு நிருபம் விடுக்கலாயினர். ஆயின் காலகதியில் இப்பிள்ளை சர்வேஸ்வரனுக்காகத் தன் ஆஸ்தி பாஸ்தி எல்லாம் இழக்கலாயிற்று. எப்படியெனில் சத்தியவேத பத்தி மானும், உத்தமகத்தோலிக்கரும், சஞ்சூசையப்பர் ஆலய மூப்பரும், அச்சுவேலிக் கோவில்பற்றின் உடையாரும், ஸ்ரீமதி தங்கமுத்துவுக்குமாமன்முறையாருமான ஸ்ரீமான் சந்தியாப்பிள்ளை அவர்கள் மானிப்பாய்க்குச் சென்று தமது சிறியதந்தையான ஸ்ரீமான் மு. வேலாயுதர்(தம்பர்) மூலமாய்த் தமது சிரேட்ட புத்திரன் ஸ்ரீ தம்பிமுத்துப் பிள்ளை அவர்களுக்கு இளங்கைம்பெண்ணை விவாகப் பொருத்தஞ் செய்து, பிள்ளையையும் தாயாரையும் அச்சு வேலிக்கழைப்பிக்கலாயினர். அக்காலம் அச்சுவேலிக் கோவில் கட்டளைக் குருவாயிருந்த வணக்கத்துக்குரிய விற்றன் சுவாமியார் அவர்கள் இம்மாதுக்கு ஞானோப தேசம் படிப்பித்து அன்னம்மா வென்ற ஞானஸ்நானப் பெயரையும் நிருபித்து பாணிக்கிரகணமெய்விவாகச்சடங் கையும் நிறைவேற்றலாயினர். பிள்ளையை அத்தருணம் திருச்சபையிற் சேர்த்தால் அதற்குச் சேரவேண்டிய ஆஸ்திபாஸ்திகள் கிடையாவென்றெண்ணியுமாமன் அதை

மறைத்து வைத்தும், நேர்மையுள்ள உத்தம குணபூஷணியான தாயார் தமக்கோர் குழந்தை யுண்டென்று குருவானவருக்கு உண்மையைத் தெரிவித்ததினால், அவர் பிடிவாதமாய் நின்றுபிள்ளையைவருவித்து ஞானஸ்நானங்கொடுத்துவிட்டு "மற்றோரெல்லாம் காணி வாங்கி விதைக்க நான் விளைவுடனே காணிவாங்கினேன்" என்றுசொல்லி அகமகிழ்ந்தார். பிள்ளைக்கு "ஞானப்பிரகாசர்" என்னும் பிட்டணொருவரின்பெயர் இடப்பட்டது. தேவாதீனமாய் இவர் சத்தியவேதம் என்னும்மதிக்கரும் பொக்ஷத்தை அடைந்துகொள்ள, அந்நாள்நாடெங்கும் புகழ்பெற்ற தனவந்தராய் விளங்கிய இவர் பெரியதந்தை, இவர் கத்தோலிக்ககிறிஸ்தவரானது பற்றி இவருக்குச் சேரவேண்டிய ஆஸ்தியைக் கொடுக்க மறுத்துவிட்டு 100 பவுண்மாத்திரம்தருமமாய்க் கொடுக்கும்படி சகோதரிக்குச் சொல்லி இறந்துவிட்டார். சகோதரியும் அவர் மரித்த ஆறும்நாள் இறந்துவிட இவரது ஆஸ்தி முழுதும் பிறர்கைப்பட்டுவிட்டது.

## குருத்துவ அழைத்தல்,

சன்மார்க்க போதினிப் பத்திராசிரியரும் அச்சியந்திரசாலைத் தலைவரும் வித்வசிரோன்மணியுமாகிய இவரது சிறியபிதா, கைம்மாறுகருதாத கருணையோடு, இவருக்குத் தமிழ்க்கல்வி மாத்திரமல்ல, ஆங்கில பாஷையு மறிவிக்கக் கருதி, சமீபத்தில் அக்கலைகற்கும் வித்தியாசாலை இல்லாததினால் அத்தருணம் தம் உற்றமித்திரராயும் அமெரிக்க மிஷன் போதகராயுமிருந்த, கனம். J M. சான்றேஸ் அவர்களிடம் இவரை விட்டு, அப்பாஷையைக் கற்றுக் கொடுக்க ஒழுங்கு செய்தார். அதைக்கண்ட பிறரும் தம்புத்திரரை அவரிடங் கலைபயில விடவே, அவருக்குத் தொந்தரவதிகரித்தது. அதனால் சிறிய தந்தையும் அப்போதகருஞ்சாவகச்சேரிக்குச்சென்று மெஸ், L. V. கிளா

றென்ஸ் என்பவரைக் கூட்டிக்கொண்டு வந்து ஓர் சிறிய அங்கிலோகலாசாலை உற்பத்தியாக்கினார்கள். (அவ்வித்தியாசாலை தற்போது அமெரிக்கமிஷனின் தாபரிப்பில் மிக விர்த்தியாய் அவ்வூருக்கு ஓர் ஆசிர்வாதமாய்த் துலங்குகின்றது.) அதற்கிடையில் பாலஞானப்பிரகாசர் தமது தந்தையால் அடியிடப்பட்டதாயும் இன்றைக்கு யாழ்ப்பாண றெயில்வேஸ்ரேசன் மாஸ்றராய் விளங்குகிறமுதலியார் கனகசபை அவர்களின் பிதாவாகிய வயித்தியநாதர் பேச் என்பவரால் அந்நாட்களில் நடத்தப்பட்டு வருவதாயுமிருந்த மானிப்பாய்க் கலாசாலைக்கு அனுப்பப்பட்டார். அப்பால் பன்னிரண்டாம்வயதளவில் யாழ்ப்பாணம் சென்பத்திரிசியார்கல்லூரியில்கற்கவிடப்பட்டார். மேலும் இவரைச்சிறிய தந்தையார் தமிழ்ச் சங்கீதத்தில் பயிற்றக் கருதிஎஸ்தாக்கியார்நாடகத்தைப் பாடி எஸ்தாக்கியாரின் புத்திரருள் ஒருவராய் இவர் நடிக்கும்படி செய்தார். அந்த நாடகத்தில் இவரேமுதல்வராகி இராகமாலிகையை எடுத்தவுடன் பாடவல்லவராய் விளங்கினார். பின்பு ஓர் பிட்டில் வாங்கிக் கொடுக்க அதில் சிலநாட்களுள் பல இராகங்களைச் செவிக்கினிமையாய் வாசிக்கவல்லவரானார். மிருதங்கம் வாசிப்பதிலும் தமது தகப்பனாரைப் போல மிகச்சிறந்து விளங்கினார்.

சென்பத்திரிசியார் கல்லூரியில் இவர் படித்த காலத்தின்பிற்பகுதியில் இவருக்கு, தற்காலம் ஆசனக்கோவிற் கட்டளைக்குருவாய் விளங்கும் வண். ஆசிர்வாதசுவாமியார் துணையானார். இருவரும் திங்களிலும் வெள்ளியிலும் பன்னிரண்டு மைல்தூரம் நடந்து யாழ்ப்பாணம் போய் வருவார்கள். பாலிய ஆசிர்வாதத்தின் மனதில் முதல் சந்நியாச அந்தஸ்தையும் பின்பு குருத்துவ நிலையையும்

நாடுஞ்சார்பாகிய வித்தை இட்டு வைத்தவர் வயதில் அவருக்கு மூத்தவராகிய ஞானப்பிரகாசரே என்றறி கிரும். இவர் வீட்டிலிருக்கும் நாட்களையும் வீண்போக் காமல் பூமரம் வைத்தல் படம் வரைதல் சங்கீதம் பயிலு தல் முதலிய வேலைகளைச் சுறுசுறுப்புடன் செய்வார்.

இவ்விதமே எட்டாம் வகுப்பில் கலைபயிலுகையில் விடுதிவிடும் வீட்டார் இவரது நடபடிகளைக் கவனித்து இவர் ஓர் குருவாய்ப் போகும் கருத்து அமைந்துள்ளா ரெனச் சிறியதந்தைக்கு அறிவிக்கலானார்கள். அதைக் கேட்டவுடனே, இவரைத் தமதிடமாய் அச்சியந்திர சாலையை நடத்தும்படி வைக்கக் கருதி இருந்த அவர், மிகவும் யோசித்து மீண்டும் தமிழ்ப்பாஷை விருத்திக்குச் சமஸ்கிருத அறிவும்வேண்டுமென்றுநினைந்து ஸ்ரீ ச. சிவப் பிரகாசபண்டிதரிடம் சில சமஸ்கிருதப் புத்தகங்களை வாங்கி பிரம ஸ்ரீ கு. சபாபதிக்குருக்களைக் கொண்டு சமஸ்கிருத அறிவைப்பயிற்றும்படிசெய்தார். அவ்விதமே பிரான்சுப் பாஷையையும் கற்க ஏவிவிட்டார். இவரைத் தம்மியந்திரசாலையுடன் கட்டுப்படுத்த எண்ணியே முன் "வச்சிரயந்திரசாலை" எனப் பெயரிட்டிருந்ததை "ஞானப் பிரகாச யந்திரசாலை" என மாற்றி விடப்பட்டது. இவ்வா றிருக்கையில் கொழும்பில், றெயில்வேச் சோதனை ஒன் றுக்கு நாட்குறிக்கப் பட்டதினால் அதற்குப் போகும்படி இவரைச் சிறியதந்தையார் இவர் பேரன் சிற்றம்பலமவர் களுடன் கூட்டி அனுப்பினர். அங்குசென்றபோது கேள் விக்கடதாசிகள் களவாய்வெளிப்பட்டனவென்று அரசாட் சியார் அறிந்து அச்சோதனையை நிறுத்திவிட்டார்கள். ஆதலால் இவரது பேரனர் தம்முடைய பழையமாணக் கணுகிய றிஸ்திரூர் ஜெனரல் ஸ்ரீமான். பொ. அருண சலந் துரையிடம் இவரைக் கூட்டிப்போய் இவருக்கு ஓர்

வேலைகொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு அவர் ஒவ்வீசலாய் ஓர் பிட்டிசமெழுதி ஒவ்வீசில்கொடுக்கும்படி சொன்னார். அது அவருக்குப் பிடிக்காமையால் தம்மகன் உத்தியோகமாயிருந்த தேயிலைத்தோட்டத்தில், இவரை வேலைபழகும்படி அனுப்பிவைத்தார். அப்படி இருக்கையில் றெயில்வேயில் மறுசோதனைக்கு நாட்குறிக்கப்பட்டது. அச்சோதனைக்குப்போய்ச் சுதேசிகளுள் முதலாமாளாய்ப் பாசுபண்ணினார். சிலகாலம் உத்தியோகத் தமர்ந்திருந்து தந்திப்பரீட்சைக்குக் கற்கவேண்டிய நாட்களில் நாலி லொருபங்கு நாளில் தம்மைப் பரீட்சிக்கும்படி கேட்டு விசேஷ சித்திபெற்று றம்புக்கனைக்கு அப்பாலுள்ள ஓர் உந்நத ஸ்தலத்தில் வேலைபார்க்க விடப்பட்டார். அந்நாட்களில் அங்கிருந்த மலை ஒன்று அதிக மழையினால் இடிந்து பாதைமேல் விழுந்துவிட்டது. புகையிரதத்தலைவர் ஆங்கு சென்று அடுத்த ஸ்டேசனுக்கு தந்தி எழுதி இவரிடம் அடிக்கும்படி சொன்னார். இவர் அடித்தாயிற்றென்றார். தலைவர் இவரை விழித்து நான் எழுதிக் கொண்டிருக்க நீரெப்படிப் பேசினீர் என்றார். எழுதும்போது பார்த்து உடனுக்குடன் பேசிவிட்டேனென்றார். அதைத் தலைவர் வெகுவாய்க்கவனித்து, இவரில் நல்லெண்ணங் கொண்டு தலைமைக் கந்தோருக்குச் சென்றவுடனே அங்கிருந்த ஸ்ரீமான், பேச், கனகசபை அவர்களிடம் இன்ன இடத்தில் ஒரு பேக்கர் இருக்கிறார் அவர் மிக்க கெட்டிக்காரன் அவரை இந்தத் தலைமைக்கந்தோருக்கு அழைக்கப்போகின்றேனென்றார். அவரோ உத்தரமாக, அவர்பேக்கரல்ல, எனது சகோதரன் முறையினரென்றார். அதற்குத் தலைவர் அப்படியா அவரின் நிறம் பற்றிப் பேக்கரென்றன்றோ நினைத்தேன். அதுவும்நல்லதுதானென்றுஉடனே தலைமைக் கந்தோருக்கு அழைத்தார். அங்கு வந்து வசித்துத் தம் பணிவிடை பார்க்கையில் தாம் குருவாய் வரத் தீர்மானித்

துக்கொண்டதாயும் இன்னும் கொஞ்சநாளைக்குச் சிறிய தந்தைக்கு உழைத்துக் கொடுக்கவேண்டுமென்று இருந்தாயும் தமது சகோதரன் கனகசபை அவர்களுக்குத் தெரிவித்தார். அவர் தடுத்துங் கேளாமையால் இச்செய்தியை அவர் சிறிய தந்தைக்கு எழுதி அறிவித்ததுடன் அதுவுமோர் நல்ல எண்ணந்தான் அவர் எண்ணப்படியே விட்டு விடுங்களென்றும் குறித்துவிட்டார். அதைக்கண்ட சிறியதந்தை, தாம் முன் காத்திருந்ததற்கு மாருய் வருவதாய் ஆத்திரங்கொண்டு உடனே லீவு கேட்டுக்கொண்டு வரும்படி தெரிவித்தார். அப்படியே இவர் வந்தபோது நீ குருவாகப் போறேன் என்றது மெய்யோ என்று வினவினர். அப்படியே முன் கடவுளுக்கு வாக்குப்பண்ணி விட்டேனென்ருர். அதைக் கேட்டதும் சிறியதந்தை துக்கத்துடனே எழுந்துசென்று அறையொன்றில் படுத்துக் கொண்டார். போசனஞ் செய்யவும் மறந்துவிட்டார். இதையறிந்த ஞானப்பிரகாசர் அவர் கிட்டச் சென்று நான் உங்கள் உத்தரவின்றிக் குருவாகவில்லை எழுந்து சாப்பிடுங்களெனப் பத்திராதிபர் இவருடன் அமுதுண்ணலாயினர்.

பின்பு இவரது பேரனுடன் இவரைக்கூட்டி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி இன்னுஞ் சிலநாள் லீவு கிடைக்கும்படி ஓர் டக்டரின் சற்றிப்பிக்கற் வாங்கும்படி யனுப்பினர். அப்படியே பேரனர் கூட்டிக்கொண்டு போயிருக்கையில் அங்கு குருமடத்தின் அதிபராயிருந்த அதி.வண. கொலின் சுவாமியாரைக்காணப் போனபோது அவர் இவரை உடனே மடத்திற் சேரும்படி நெருக்க இவர் தாம் சிறியதந்தையாருக்குப் பண்ணிய வாக்கைப்பற்றிப்பின் னிட்டுக்கொண்டு நின்ருர். கொலின் சுவாமியார் தாமதமில்லாமல் இவரை மேற்றிராணியாண்டவரிடம் அழைத்துப் போய் வேண்டிய உத்தரவை அவரிடம் பெற்றுக்கொடுத்து

உடுத்துவந்த உடையோடுதானே குருமடத்தில் நிறுத்தி வைத்துக்கொண்டார். இவற்றைக் கேள்விப்பட்ட சிறிய தந்தை மிகவும் ஆத்திரப்பட்டு தாயாரைப் பார்த்து உமது மகன் இப்படி எனக்குச் செய்துபோட்டார் அவரைக் கூட்டிக்கொண்டல்லாது நீர் வீட்டில் பிரவேசிக்கப்படாதெனக் கண்டிப்பாயனுப்பலாயினர். மாதாவுங் குருமடஞ் சென்று சங்கதிகளைச் சிரேட்டருக்குத் தெரிவிக்க அவர் உமது மகன் வரப்பிரியப்படில் கூட்டிப் போகலாமெனச் சொல்லிச் சுவாமியாரை அழைத்து விடலாயினர். சன்னியாச அங்கி தரித்தவராய்த் தம்முன்வந்த மகனைக்கண்டு தாயார் தமது மகன் புரோட்டெஸ்தாந்த மதப் பாதிரியாராயல்லச் சத்தியவேதக் குருவாய் வரப்போகிறதைப் பற்றி ஆனந்தங்கொண்டு வீடுசென்றார். நாயகரும் காலகதியில் மனந்தேறிக் கொண்டார். அதெவ்வாறெனில் ஸ்ரீமான். தம்பிமுத்துப்பிள்ளை தொடக்கத்திலே ஞானப்பிரகாசரைத் தம்மோடே வைத்துக்கொள்ள ஆவற்பட்டதும் உலகத்திலே திருச்சபைக்கும் தேசத்துக்கும் தொண்டு செய்தற்காவதே யன்றி வேறொன்றினுக்காக வல்லவென்பதை இங்கு குறிக்கவேண்டும். இவர் சத்தியவேத நூல்களையும் தமிழ்ச்சாதியத்தாருக்கு உபகாரமான வேறு பலபிரபந்தங்களையும் வெளிப்படுத்தி எம் நாட்டை முன்னுக்குக் கொண்டுவர உழைப்பதையே தொழிலாகக் கொண்டவர். தாமாகப் பலநூல்களைக் கற்றுத் தேர்ந்த தமிழ்ப் பண்டிதர். இன்பகவிபாடும் புலவர். எப்போதும் எவர்க்குங் கையுதவி செய்ய ஆயத்தமாயிருக்கும் உதாரி. தம்மூரவராலும் அயலூரவர்களாலும் அரசினராலும் அபிமானிக்கப்பட்டு வரும் பொதுநன்மை விரும்பி திருச்சபை அதிகாரிகளால் மிகமதிக்கப்பட்டு தம்மூரின் சஞ்சூசையப்பர் கோவிலுக்கு மூப்புவாக நியமிக்கப்பட்டவர். இவரது உதாரம், நேர்மை, பொதுநல விருப்பு ஆதிய

சுகுணங்களே இவர் வளர்த்த புத்திரனுகிய ஞானப்பிரகாசரிடத்தும் வெகுவாய்ப் பிரதிபிம்பிக்கலாயின வென்னலாம். ஆதலால் ஞானப்பிரகாசர் தம்மோடிருந்து உலக நன்மைக்காய் உழைப்பதல்ல குருத்துவ நிலையிற் சேர்ந்து அதற்காக அதிகமாய் உழைப்பதுதான் தேவசித்தமாயிற்றென்று கண்டவுடனே பணிந்தமனதோடு தமது சுய விருப்பென்னும் பலியை அனைத்தினுக்குங் கர்த்தரானவர்க்கு அர்ப்பணஞ் செய்து விடலானுர்.

இனி, சுவாமி ஞானப்பிரகாசர் குருமடத்திலிருந்து கொண்டே தொடக்கம் பண்ணி இன்றைக்கும் செய்து கொண்டுவருகிற சத்தியவேத சம்பந்தமான முயற்சிகளை எடுத்துச் சொல்லுவோம். இவரது சொந்த சீவியத்தின் வரலாறுகளை வரைந்து இவரது சுகிர்த நடக்கையைப் புகழுவோமானுல் பெரியோர்க்குரிய தாழ்மை யென்னும் புண்ணியத்திற்கு பங்கஞ் செய்ய எழுந்ததாகும். சுவாமியார் யாவருமறியத் தேவ தோத்திரத்துக்காக நடப்பித்தவைகளை வரைந்து வைப்பதோ எவருங்குறைகூற அமையாத ஒரு காரியமாம் எமக்குங் குன்றுத கடமையுமாம்.

## ஆக்கியோனும் பதிப்பாசிரியரும்.

சுவாமி ஞானப்பிரகாசர் குருமடத்திற் சேருமுன் தொட்டே வேதநூல்களை விருத்தியாக்குவதில் எடுத்துக் கொண்ட பிரயாசம் கவனிக்கத்தக்கது. இலங்கையிலே சம்பிலிப்பு நேரியார் தியானசம்பிரதாயக் குருமார் வேலை செய்து போயினபின்பு தமிழ்ப்பாஷையிலே புதிதாக எழுதப்பட்ட சத்தியவேத நூல்களை ஒருகையின் விரல்களிலே எண்ணி முடித்துப்போடலாம். அர்ச் ஞசை மாமுனிவர் அச்சுக்கூடத்தில் பள்ளிக்கூடப் பாட புஸ்தகங்களைத் தவிர அச்சிடப்பட்டிருந்த சத்தியவேதப் புஸ்தகங்கள்





*Photo by A. W. Co.*

சுவாமி S. ஞானப்பிரகாசர் நூலாராய்ச்சி செய்கிறார்.

எவை யென்றால் கோவைச்சுவாமிமார் செய்து வைத்துப் போன செபப்புத்தகங்களும் பசாம் சுவிஷேச விரித்துரைகளும் இவற்றோடு இன்னும் நாலுமூன்றுமொழிபெயர்த்த சரித்திரங்களுமேயாம். அச்சுவேலி யந்திரசாலையிலும் சில அம்மானை நாடகங்களும் இன்னும் தற்காலப்புலவர்கள் செய்த சிறுச் சிறுக் கீர்த்தனம் முதலியவைகளும் மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தன. சுவாமி ஞானப்பிரகாசரின் முயற்சியால் இப்போது நூற்றுக்குக் குறையாத நூல்கள் எழுதவோ அல்லது பதிப்பிக்கவோ பட்டிருக்கின்றன இவர் அரசாட்சி உத்தியோகத்திலிருக்கும்போது சிலநூல்களை எழுதுவதில் முயற்சியாயிருந்ததினால்சத்திய வேத நூல்களை எழுதிப் பிரசுரிப்பிக்க போதிய இடம் கிடைக்குமென்று மடத்ததிபராயிருந்த மகா வணக்கத்துக்குரிய கொலின்சுவாமியார் அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டே உலகத்தைத் துறந்து மடத்துக்கு வந்தார் வந்த அயல்நாளில் கொலின்சுவாமியார் "அமலோற்பவ இராக்கினிதூதன்" என்னும் மாதாந்த சஞ்சிகையை தொடக்கி நடத்த இவரை ஏவிவிட்டார். இராக்கினிதூதன் மூலமாய் முன்மறைந்து கிடந்த அருமையான பல புத்தகங்கள் அரங்கத்திற் கொண்டுவரப் பட்டன. அது 12 வருஷகாலம் நடத்திவந்த அப்போஸ்தொலிக்க வேலையையும்பற்றி அறிந்தவர்களிடம்வினவினால்விளங்கும் முற்காலங்களில் இலங்கைத் திருச்சபைத் தோட்டத்திலும் பிறஇடங்களிலுமிருந்து திருத்தொண்டு புரிந்துவந்த குருமாருடைய சரித்திரங்களையும் அவர்களுடைய பரிசுத்த நடபடிகளையும் அவர்களியற்றிய நூல்களையும் அந்நூற்களிலுள்ள விபரங்களையும் அது கிளிப்பிள்ளையைப் போல ஒவ்வோர் மாதங்களிலும் வந்துகிறிஸ்தவர்களுக்கு ஓதியபடியே இருந்தது. அம்மட்டா, ஆத்தும நிருணயம் பச்சிம புரந்திமகாண்டம், தேவப்பிரசைகளின் திருக்கதை

ஆகிய பழைய நூற்களில் இன்னின்ன விபரமறியலாம். அதைத் தற்போது இன்ன இடத்தில் வாங்கலாமென்று அறியாத தமிழ்க் கிறிஸ்தவர்கள் அறிந்து வாங்கப்பண்ணி அதனால் எவ்வளவோ பிரயோசனங்களைச் செய்யலானது "இளையோருடைய சொந்தக்கோணம்" என்ற ஓர் இடம் சிறுவருக்காக விட்டு அதில் சிறுவர் எழுதவும், வேதவினவிடைகள், கொடிகள் முதலியவைகள் போட்டுப் பாலியர் மனதை இழுத்து வேதாகம விஷயங்களில் குழந்தைப் பருவத்தே செல்லும்படி செய்து கொண்டுவந்தது இதனை எழுதும் நாம் தமிழ் எழுதப்பழகினதும் இளவலாயிருக்கையில் அப்பத்திரிகைக்கு எழுதத் தொடங்கிய நிலையாம். அது நிலவியகாலத்தில் மாதாந்தம் கிறிஸ்தவர்களுக்கோர் உற்றதுணையாய் ஒவ்வோர் மாசத்திலும் ஒவ்வோர் நற்கருத்தைத் தூண்டிக்கொண்டு வந்தது விசேஷமாய் "நத்தார் சிந்தனை" என்ற மகுடத்துடன் மார்கழிமாசத்தில் திவ்வியபாலனைப்பற்றி எழுதப்பட்டவைகள் என்ன விதமான பத்திசொலிக்க, தேவ குழந்தையின் அன்பு பிரகாசிக்க எழுதப்பட்டன. இது மட்டா, சிலநூல்கள் "இராக்கினி தூதன்" மூலமாய்த் தான் வந்து பின்னர் புஸ்தகமாயின. "வெகின உற்சவம்" யோசேவாஸ் முனிவர் சரித்திரம் இவைகள் கோவைக்குருமாருடையவைகள் "பூசைமகத்துவம்" ஆக்கியோனுடையது. "கதாவினோத பூங்கொத்தும்" அப்படியே இவை போன்ற அநேக சரித்திரங்கள் கதைகள் பிரார்த்தனைகள் கீர்த்தனைகள் போதனைகள் என்று மாதந்தோறும் இப்பத்திரிகையில் வந்த சீராய்இருந்தது. தற்போதும் சிலவேதப் பத்திரிகைகளில் இராக்கினிதூதனில் நின்றெடுக்கப்பட்ட விஷயங்கள் வரக்காண்கிறோம்.

இராக்கினிதூதன் தொடங்கின நாட்களிலேயே வண. கொலின்சுவாமியாருடைய அனுமதியோடும் தூண்

டுதலோடும் சுவாமி ஞானப்பிரகாசர் "சர்வசனப் பொதுச் சமயம்" எனும் சிறுநூலை மொழிபெயர்த்தும் "சத்திய வேதஞானக்கீர்த்தனங்க"ளைத்திருத்திவெகுவாய்ப்பெருப் பித்தும் "பிரிவினை மதங்களும் பைபிளும்" என்ற நூலைத் துண்டுப்பத்திரங்களாய்ப் பதிப்பித்துங் கொண்டு வந்த தோடு, சத்தியவேதபாதுகாவலனிலே வந்த தர்க்கசம்பந்த மான விஷயங்களை எழுதவுந் தொடங்கினர். ஓர் கால் நூற்றாண்டளவில் எமது திருவேதம் பிறசமயிகள் முன் செயங்கொள்ளத்தக்கதாக இவர் "காவல"னுக்குச்செய்து வந்த விஷயதானங்களைப்பற்றி வேறோரிடத்தில் பேசு வோம். இவ்விடத்தில் அக்"காவலன்" இவரால் அடைந்து கொண்ட முன்னேற்றத்தையும் அதின் நியாய தோரணி களையும் பாஷை நடையையும் பின்பற்றி நம்மவர்கள் மாத் திரமல்ல பிறசமயிகளும் பத்திரிகைக்காரர்களும் அடை ந்துகொண்ட திருத்தத்தையும் மாத்திரம் குறிக்கத்தகும். 1912-ம் ஆண்டோடு "இராக்கினிதூத"னுக்குரிய விஷயங் களையும் "காவல"னில் சேர்த்துக் "காவல"னை அத்தோடு வாராந்தப் பத்திரிகை ஆக்குவித்தவரும் சுவாமி ஞானப் பிரகாசரே. அன்று தொடக்கம் பத்துவருஷங்களாய் "காவல"னை இவரே மேல்பார்த்து அருமையான விஷயங்க ளையும் அதற்கு உதவிக்கொண்டுவந்தார். முன் "இராக்கினி தூத"னில் பாகம் பாகமாய்த்தோற்றி வெளியான நூல் களைப்போல "காவலனி"லும் சுவாமி ஞானப்பிரகாசரால் பதிப்பிக்கப்பெற்ற குடும்பவாசகசாலை என்னும் வரிசை யான நூல்களும் துண்டுப்புத்தகங்களும் தோற்றி வெளி யாயின.

காவலனில் நடந்த தர்க்கங்களைத் திரட்டிக் காலத் துக்குக் காலம் வெளிப்படுத்திய வேததர்க்கத் துண்டுப் புத்தகங்கள் இருபத்திரண்டும் ஒருங்குசேர்ந்து சமய

ஆராய்ச்சிக்கு மிக வாய்ப்பான ஒரு பெரிய பிரபந்தமா கின்றன. இன்னும் புத்தகரூபமாய் வெளிப்படாதவை களைத் திரட்டி அச்சிட்டால்பலபெரியகாண்டங்களாகும்.

இவற்றைத் தவிர, சுவாமி ஞானப்பிரகாசர் தனிப் புத்தகங்களாய் அச்சிட்டவைகளும் பல. கோவைக்குரு மாரின் நூல்களை வெளிப்படுத்தியபதிப்புக்களும்பல. தம் மோடுகூட திருவூழியம் நடத்துகின்ற வேறுகுருமாரைத் தூண்டி அருட்டி விட்டு எழுதுவித்துப் பதிப்பித்தவை களும் பல. இவ்வாறே அச்சியந்திரோபாயத்தினால் வேத அறிவை விருத்தியாக்கும் முயற்சி எம்நாட்டில்முன்னொரு காலுமில்லாதவிதமாய் நடப்பதாயிற்று. இதனைக்கண்டு திருச்சினாப்பள்ளியிலும் சென்னையிலும் இவ்வித முயற்சி கையாளப்பட்டமை அதிசயமன்று. அதுமட்டோ! கொழும்பில் தற்காலம் கத்தோலிக்க ஐக்கியத்தின் ஆதரவிலே எம் யாழ்ப்பாணப் பிரபுவாகும் ஸ்ரீ. ஜே. ஐ. ஞான முத்து அவர்களாலும் அவர் துணைவர்களாலும் மிக மும் முரமாய்ச் செய்யப்பட்டு வருகின்ற சத்தியவேத நூற் பரப்புதல் வேலையும் சுவாமி ஞானப்பிரகாசர் யாழ்ப்பா ணத்தில் நடத்திய வேலையின் ஓர் எதிரொலியே என்று சந்தேகமறச் சொல்லலாம். இந்த வேதநூற் பரப்புதல் வேலைக்கு சுவாமி ஞானப்பிரகாசர் வெளிப்படுத்த ஆயத் தம்பண்ணி வரும் "சத்தியவேதநூல் இடாப்பு"ம் மிக உகபாரமாயிற்று. இவர் இலங்கை முழுதும் சென்று ஆங் காங்கு பழைய வேதக்காரர் இல்லங்களில் கைச்சரவை யாயும் பழம் பிரதிகளாயும் மறைந்துகிடந்த கத்தோலிக்க நூல்கள் எவையெவையோ அவற்றை யெல்லாம் கண்டு பிடித்து, அவற்றைக் குறித்த விபரங்களைப் பத்திரிகை களில் வெளிப்படுத்தினதோடு, இலங்கையில் எவ்வெப் பாஷையிலும் எழுதப்பட்ட சகல வேதநூல்களினும்

விபரமான இடாப்பொன்றை வகுக்கலானார். இதனால் மறைந்து கிடந்த பல நூல்கள் அச்சுவாகனம் ஏறிப் பரம்பலாயின. இன்னும் பல கையெழுத்துப்பிரதிகள் வெளிப்படுவதற்கு ஆயத்தமாகி வருகின்றன.

சத்தியவேத பழைய நூல்ஆராய்ச்சியோடு, இத்தீவில் எம்முடைய திருவேதம் உண்டாகி வளர்ந்து கொண்டு வந்த சரித்திரத்தை ஆராய்வதிலும் சுவாமி ஞானப்பிரகாசர் பிற ஆராய்ச்சி வல்லோருக்கெல்லாம் முன்னோடியானார். இலங்கைத் திருச்சபைச் சரித்திர ஆராய்ச்சிக்காக அவர் போர்த்துக்கீஸ், இத்தாலியம், டச்சு ஆதியபாஷைகளையும் கற்று அருமையான நூல்களை ஆராய்ந்தும், ஆங்காங்குள்ள பழங்கட்டிடங்கள் பழம் பொருட்களைப் போய்ப் பரிசோதித்தும் வெகு சிரமத்தோடு இங்கிலீசில் எழுதிய "இலங்கைத் திருச்சபைச் சரித்திர"த்தின் முதற்பாகம் வெளிவந்துவிட்டது. இந்தச் சரித்திர ஆராய்ச்சிக்குரிய நூல்களைத் தேடும்படி நம் யாழ்ப்பாணப் பட்டின வாசிகள் பலர் சேர்ந்து இவரை 1922-ம் ஆண்டு கோவைக்கு அனுப்பினார்கள். அங்கு இவர் கண்டுபிடித்தவைகளுள் ஒன்று என்னவென்றால், இற்றைக்கு 300 வருஷங்களின் முன் யாழ்ப்பாணப் புதுமை மாதாவின் கோவிலிலிருந்து அங்குகொண்டு போகப்பட்ட அற்புதமுள்ள ஒருமாதா சுரூபமாம். நூலாராய்ச்சி நோக்கமாக இவரை ஐரோப்பாவுக்கும் அனுப்ப ஓர்முயற்சி நடந்தது. ஆயினும் அது முற்றுப்பெறவில்லை. நம்முடைய மேற்றிராசனத்தின் இருபத்தைந்து வருஷ விருத்தாந்தமாகிய அதி ஆசாரத்துக்குரிய யூலன் ஆண்டவர் காலச் சரித்திரத்தையும் ஒவ்வொரு மிசாமை, ஒவ்வொரு கோவிலை, குருமாரை, விசேஷித்த மனுஷரைப்பற்றிய அதிமனோகரமான ஆராய்ச்சிகளோடு இங்கிலீசில் வெளிப்படுத்தினார்.

இலங்கைத் திருச்சபைச் சரித்திர ஆராய்ச்சியோடு யாழ்ப்பாணத் தேசசரித்திர ஆராய்ச்சியிலும் சுவாமி ஞானப்பிரகாசர் தேர்ந்தயர் என்பது இலங்கையாரெல்லோரும் அறிந்த விஷயம். இலங்கை இராசிய ஆசிய சங்கத்திலும் யாழ்ப்பாணச் சரித்திர சங்கத்திலும் சேர்ந்து, இவைகளில் சரித்திர விஷயமாய் வியாசங்கள் எழுதியும் படித்தும் கொண்டுவந்திருப்பதோடு, இலங்கைப் புராதன ஆராய்ச்சிப்பத்திரிகை முதலியவைகளுக்கு சரித்திர நிபுணர்களால் மிகமதிக்கப்பட்ட விஷயங்களும் எழுதியிருக்கிறார். இவரே போர்த்துக்கீசர் காலத்து யாழ்ப்பாணச்சரித்திரத்தை முதன்முதல் இங்கிலீசில் எழுதியவர். எம் யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களின் முத்திரைக்காசுகளையும், சங்கிலி அரசனின் கோப்பாய்க் கோட்டை இருந்த இடத்தையும் கண்டுபிடித்தவரும் இவரே. பல பாஷைகளிலுமிருந்து ஆராய்ந்து, முன்னொருபோதும் வெளிப்படாத பல சம்பவங்களைக் காட்டி நம் யாழ்ப்பாணச்சரித்திரத்தை முறைமையாக நாட்டுகின்ற பெற்றியுடையதாய் இவர் எழுதிவருகின்ற "யாழ்ப்பாணவைபவ விமர்சனம்" என்னும் நூல் அச்சிலிருக்கிறது. "யாழ்ப்பாணவைபவ கௌமுதி" என்னும் சரித்திரத்திலுள்ள போர்த்துக்கீசர்காலம் ஒல்லாந்தர் காலம் என்னும்பெரும் பாகம் இரண்டும் சுவாமி ஞானப்பிரகாசராலே எழுதி உதவப்பட்டன வென்பதையும் இங்குகுறிக்கத்தகும்.

இச் சரித்திர ஆராய்ச்சிகளாலும், தமிழ்ப்பாஷை அறிவின் முதிர்ச்சியினாலும் சுவாமி ஞானப்பிரகாசர் கற்றோர் சபைகளிலெல்லாம் கண்ணியமுடையவரானார். இலங்கையிலுள்ள சமஸ்கிருத சிங்கள தமிழ்ப்பண்டிதர்களுள் இவரை அறியாதோரில்லை. இம்மூன்றுபாஷை உணர்ச்சியோடு எழு ஐரோப்பிய பாஷைகளும் இவர் வாசிப்பவர்

எல்லெக் கத்தோலிக்க நாடுகளிலும் இவரது பிரக்கியாதி எட்டியிருக்கிறது. இலங்கை அரசாட்சியாரின் பரிபாலனத்தின் கீழ் நடக்கும் "ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்"தில் இவர் ஓர் நிருவாகசபை அங்கத்தினரும் பண்டித பரீட்சைப்பரிசோதகருமாவர். வித்தியா பகுதியாரின் "தமிழ்ப்பாடப்புத்தக ஆலோசனைச் சபைக்கும்" இவர் ஓர் அங்கம். இலங்கைச் சரித்திரம், தமிழரின் சமய சரித்திரம், தமிழ்மொழியுற்பத்தி எனும் இவ்விஷயங்களில் இவரது அபிப்பிராயங்கள் கற்றோராற்கேட்கவும் மதிக்கவும் படுகின்றவைகளாம். இவ் விசேஷ அறிவுகளை யாதோர் சர்வகலாசாலையிலும் பயிலாமலே தமது ஊக்கமான உழைப்பினால் மட்டும் தேடிக்கொண்டமை, சுவாமி ஞானப்பிரகாசருக்குச் சருவேசுரன் அளித்த நுண்ணிய மதிவன்மையைக் காட்டுகின்றது.

## வேத தர்க்கமும் பொதுப்பிரசங்கமும்.

சென்ற முப்பது நாற்பது வருடங்களுக்குள்ளே யாழ்ப்பாணத்தில் நம் பிறசமய சகோதரர்களாகிய சைவ சமயிகள் கல்வியிலும் நாகரீகத்திலும் அதிக திருத்தமடைந்து கொண்டார்களென்பது சொல்லாமலே விளங்கும். முற்காலம் தங்களுடைய சமய நூல்களை வெளிவிடாது வைத்திருந்தவர்கள் இக்காலம் அவற்றைப் புத்தகங்கள் பத்திரிகைகள் மூலமாய்ப் பகிரங்கப் படுத்தத் தொடங்கியிருப்பதுநன்றாய் அறியப்பட்டஒரு விஷயம். முன் சத்தியவேதத்தை உச்சிமேல்வைததுக் கொண்டாடி அதனால் திருத்தப்பாடும் முன்னேற்றமும் அடைந்து கொண்டு வந்தவர்கள் இப்போது தங்கள் சமயம் அதிலும் விசேஷித்தது எனக் கூறி அதில் தவறுகள் ஆரோபிக்கத் தலைப்பட்டு வருவதையும் காண்கிறோம். அத்தர்க்கக்காரர் விளங்காமல் விளங்கிக் கொண்டு கொடுக்கிற ஆட்சேபனை

களுக்குத் தக்க தக்க சமாதானஞ் சொல்லி சத்திய வேதத்தின் உண்மை சுயம்பிரகாசமாய் இலங்கப் பண்ணி வைத்தவர் சுவாமி ஞானப்பிரகாசரே என்று சரித்திரம் சாட்சி பகரும். முற்காலம் சமய தர்க்கம் நிகழ்ந்த வேளைகளில் சைவர்கள் கிறிஸ்தவர்களை நோக்கி: நீவிர் இதை எங்கு கற்றீர்? எங்கள் சமய வேத ஆகமங்களின் பாஷையும் உமக்குத் தெரியாதே என்று கேட்பது வழக்கம். சுவாமி ஞானப்பிரகாசரிடத்தில் இப்படியான கேள்விகள் கேட்க முடியாமற்போனது மட்டுமல்ல, தமது சமஸ்கிருத நூலாராய்ச்சியினாலும் தமிழ்ப் பாண்டியத்தினாலும் இவரே இக்காலயாழ்ப்பாணத்துச் சைவர்களுள் விசேஷம்பெற்ற ஸ்ரீ குகதாசர் சபாரத்தின முதலியார் அவர்களுக்கும் சைவசித்தாந்தவிஷயத்தில்தெரியாததைச் சொல்லிக்கொடுத்தும், பிரம்மஸ்ரீ சரவணபவக்குருக்கள் ஆதியோரும் நால்வேதங்களிலிருந்து மேற்கோள்கேட்டுப் பெற்றுக்கொள்ளத் தக்கவராய் விளங்கியும் வந்தவரானார்.

முன் சொல்லியபடி, சத்தியவேதத்தின் உச்சிதமேன்மைசொலிக்கும்படியாக சுவாமிஞானப்பிரகாசர் "காவல"னிலும் "பாலசந்திரன்" "ஆத்மபோதினி" "தேசாபிமானி" ஆதிய சில சைவப் பத்திரிகைகளிலும் எழுதிய தர்க்க விஷயங்களைத் திரட்டிப்பதிப்பித்தால் பல காண்டங்களாய்ப் பொலியும்.

பத்திரிகைகளில் எழுதிய ஆராய்ச்சிகளைத் தவிர சென்னபட்டினம், கொழும்பு, மட்டக்களப்பு, திரிகோணமலை, யாழ்ப்பாணம் ஆதிய இடங்களில் காலத்துக்குக் காலம் சைவப்பிரசங்கிகளால் செய்யப்பட்ட சத்தியவேத கண்டனங்களை ஒதுக்கிக் கிறீஸ்தவர்களைக் குதூகலிக்கப்பண்ணச் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதி அச்சிடுவித்தனுப்பிய துண்டுப்பத்திரங்களும் பல. இவ்வாறே மைறன் பெல்ப்ஸ், என்னுமொரு அமெரிக்கன் சத்திய

வேதத்திற்கு மாருகக் கொழும்பிலும்யாழ்ப்பாணத்திலும் பிரசங்கம் பண்ணிக்கொண்டு திரிந்தபொழுது மிலேச்ச தேசத்தில் பிறந்துள்ளவரான அவர் ஓர் போலிச் சைவனே என பிரமாணசகிதமாய்க் காட்டி இவர் இங்கிலீசில் இரண்டு காரசாரமான துண்டுப் புத்தகங்கள் எழுதிப் பிரசுரித்து விடவே அமெரிக்க இந்து அந்தர்த்தானமாய் விட்டார். ஸ்ரீ சந்திரவர்மா, சைவத்திருவாளர் ஆறுமுக நயினர்பிள்ளை, ஸ்ரீ நாகலிங்கப்பரதேசியார் ஆதிய பிறரும் இப்படியே சுவாமி ஞானப்பிரகாசருடைய சமாதானங்களைக்கேட்டு அடங்கினர்கள். தர்க்கக்காரர் பிரசங்கவாயிலாய் வெளிபட்டபோது அவர்களுக்கு இவர் பொதுப் பிரசங்கவாயிலாயும் விடை இறுத்து பரமதகண்டனமும் சுயமதஸ்தாபனமும் செய்தார். மட்டக்களப்பு, பண்டியன்தாழ்வு, சுண்டிக்குழி, கரையூர், நல்லூர், இளவாலை, அச்சுவேலி, திருநெல்வேலி, நீர்வேலி, கோப்பாய், மல்லாகம், மயிலிட்டி, சுன்னுகம், குளமங்கால், கொழும்புத்துறை, பாசையூர், கௌதாரிமுனை, வதுரி என்னுமிவ்விடங்களிலெல்லாம் நூற்றுக்கணக்கான பிறசமயிகளும் கிறிஸ்தவர்களும் குழுமிய சபைகளில், இடையிடையே சங்கீதம் நிகழ, குதூகலமான கரகோஷத்தின் நடுவில் சத்தியவேதஸ்தாபனஞ் செய்யப்பட்டது.

இப்பிரசங்கங்களின் மாதிரியை அச்சிலே பார்க்க வேண்டுமானுல், தமிழில் "சைவரும்மச்சமாமிசமும்" என்ற துண்டுப்புத்தகத்தையும், இங்கிலீசில், "கிறிஸ்து சமயத்திலும் பௌத்த சமயத்திலும் சரித்திரநோக்கு" என்ற பெயருள்ள துண்டுப்புத்தகத்தையும் காண்க. முந்தியது யாழ்ப்பாணம் அர்ச் ஞசைமாமுனிவர் அச்சியந்திரசாலேவளவிற் செய்த பிரசங்கம். பிந்தியது கொழும்பில் புண்ணியஉபன்னியாசம். இவ்வாறே தென்னிந்தியபௌத்

தர்கள் சத்திய சமய தூஷணஞ் செய்து கோலாகலம் பண்ணியபோது, அவ்விடத்துள்ள கிறீஸ்தவர்கள் சுவாமி ஞானப்பிரகாசரது லேகினியின் உதவியை வேண்ட, இவர் "தமிழன்" என்னும் புத்தருடைய பத்திரிகையின் தவறுகளை எடுத்துக்காட்டி "தமிழன் தலையிலடி" என்னும் துண்டுப்பத்திரத்தை விடுக்க, அப்பத்திரிகை இருந்தவிடமுந் தெரியாமற் போய்விட்டது. புரோட்டெஸ்தாந்தருடைய நியாயவாதங்களுக்குஞ்சமாதானங்கூறி உண்மையை நிலைநாட்டுவோராயினர். பாசையூர்ப் பாதிரியார் ஒரு துண்டுப்புத்தகத்தோடு மடங்கி விட்டார். சுந்தரசிங்கு என்பவர் யாழ்ப்பாணத்திலும்பிறஇடங்களிலும் ஓர் புதுப் புரோட்டெஸ்தாந்த போதகத்தைச் செய்து கொண்டு அதுவேஉண்மைக்கிறீஸ்து சமயமெனக் காட்டமுயன்ற போது சுவாமி ஞானப்பிரகாசர் அவர் போனபோன இடமெல்லாம் அவருடைய உண்மை நிலையைப்பற்றிய துண்டுகளைப்பரப்பி நோய்வருமுன்னமே மருந்து செய்து விட்டார். இத்தர்க்கவிஷயங்கள், பொதுப் பிரசங்கங்களினால் நம்முடைய திருவேதத்தின் மகிமை என்றுமில்லாதவிதமாய் பிறசமயிகளுக்குள்ளே பிரஸ்தாபிக்கப் பட்டமை ஒரு விசேஷமென்றால், சத்தோலிக்கக் கிறீஸ்தவர்கள் தங்களிடத்திற் சந்தேகங்களைச் சொல்லுவோருக்கு ஏற்ற விடைகூறக் கற்றுக்கொண்டமை இன்னும் அதிக நன்றி பாராட்டுதலுக்குரிய விசேஷமாகின்றது.

## உத்தியானத்தை விசாலமாக்க உழைத்தல்.

தேவஉதவியோடு சுவாமி ஞானப்பிரகாசர் செய்த முயற்சியால் யாழ்ப்பாணத்திருச்சபை யென்கிற உத்தியானம் விசாலித்து முன்னொருபோது மில்லாத விருத்தியடையத் துவங்கியிருக்கிறது. திருச்சபை வளர்வேணும்

என்பதும் நம்முடையநாடு முழுதாய்மனந்திரும்பி ஈடேற வேணுமென்பதும் சிறுவயது முதலாகவே இவர் மனதிலுதித்த தாயிற்று. தாம் அஞ்ஞானத்திலிருந்து "எரிகிற வீட்டில் இழுத்த கொள்ளிபோல"த் தேவாதீனமாய்ச் சத்தியவேதத்திற் சேர்க்கப்பட்ட மகா உபகாரத்திற்கு ஓர் நன்றியறிதல்போலத் தம்மாலியன்ற ஆத்துமாக்களையெல்லாம் ஈடேற்றிப்போடவேண்டுமென்ற ஆத்திரத்தோடு சிறுபிள்ளையாய் இருக்கும்போதும், இவர் கொண்டிருந்த நல்லெண்ணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். மானிப்பாயில் தமது தகப்பனாரின் பள்ளிக்கூடத்திற் படித்தபொழுதே புரோட்டெஸ்தாந்தருடைய ஓய்வுநாட் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டியவராயிருந்தகாலையில், தமது வகுப்பைப் படிப்பித்த போதகரையும் சத்தியவேதத்தில் திருப்பிப்போட வேண்டுமென்ற அவாவினால், இவர் அருளப்பநாவலர் "சத்தியவேத பாதுகாவல"னில் எழுதிய "கள்ளத்தபாசை நசுக்கிஉடைக்குஞ் சம்மட்டி" என்ற தர்க்கத்தை வெட்டிப் புத்தகமாய் ஒட்டிக்கொண்டு அந்தப்போதகரோடு தர்க்கமாடப்போனது இந்த ஆத்தும இரட்சணிய ஆவலுக்கு ஒரு நல்ல உதாரணம். இப்படியே மானிப்பாயில் படித்துக்கொண்டிருந்த காலமெல்லாம், தாம் பத்துப் பன்னிரண்டு வயதுமட்டுமுள்ள சிறுவனாயிருந்தும், தம் இனபந்துக்களைச் சத்தியவேதமாக்கிவிட மிக வருந்தினார். பின்பு சம்பத்திரிசியார் கல்லூரியில் பயிலுங்காலத்தில், தம்மோடு ஓரே விடுதியிலிருந்த இளைஞர்களுக்குத் தாம் ஓர் குருப்போலாகிவேத வாசிப்பு செபத்தியானம் முதலியவைகளிலே அவர்களை முற்படச்செய்ததோடு, தமது சொந்தக் கிராமத்துக்குப் போகும்போதெல்லாம் தம் வயதினரான இளந்தாரிகளை அதிக பயபத்தி உள்ளவர்களாக்க வருந்தினார். அந்நாட்

4

களிலேதான் அப்புறங்களில் ஒரு கோவிலிலும் முன்னில்லாத ஒரு வழக்கம், அதாவது மாலைதோறும் அநேக வாலிபர்கள் கூடிச் செபமாலை சொல்லி ஞானவாசினையுஞ் செய்யும் ஏற்பாடு, அச்சுவேலி சஞ்ஞுசையப்பர் கோவிலிலே தொடங்குவதாயிற்று. பால ஞானப்பிரகாசர் காற்றோமழையோ, இருட்டோ நிலவோ, என்னவிதமான கால நிலையிலும் சில வாலிபர்களை நாள்தோறும் செபமாலைக்கு வரச் செய்தது மல்லாமல், அது முடிந்தபின் வாசிப்பதற்கு வேண்டிய நல்ல புத்தகங்களையும்வாங்கிக்கொடுத்து விட்டார். இப்புத்தகங்களின்தொகைகூடவே வீடுகளிலே அவைகளைக் கொடுத்து வாசிப்பிக்கவுந் தொடக்கஞ் செய்யப்பட்டது. இதுதான் யாழ்ப்பாணத்திலே முதலான "சுற்றிவரும் புத்தகசாலை" என்று சொல்லலாம் போலும். அச்சுவேலியிலே, கோவிலில் மாலைதோறும் செபமாலை சொல்லும் வழக்கம் இற்றைக்கு முப்பத்தைந்து வருடமாய் நிலைத்து வந்திருக்கிறது. தோட்டக் காடுகளில் வேலை பழகித் திரிந்த நாட்களிலும் கொழும்புப் பகுதிகளிலே கவண்மெந்து உத்தியோகமாய் இருந்த நாட்களிலும் ஞானப்பிரகாசர் பிறரது ஆத்தும ஈடேற்ற அலுவலை மறந்து விட்டவரல்ல. அதனால் தேயிலைத்தோட்டங்களிலே தங்கள் வேதக்கடமைகளை மறந்து விட்டிருந்த சில கிறீஸ்தவர்களை நல்வழிப்படுத்தினதோடு, தம்மினத்தவரான சில சைவர்களையும் மனந்திருப்பி ஞானஸ்நானம் பெறச்செய்தார். றெயில்வே உத்தியோகமாயிருந்த ஸ்தானங்களிலும் இப்படியே தம் சிநேகிதர்களுக்குச் சத்திய வேத புத்தகங்கள் அழைப்பித்துக் கொடுத்தும் தூரத்திலுள்ளவர்களோடு கடித மார்க்கமாய் வேத சம்பாஷணை செய்து கொண்டும், தாம் இன்னும் வேத அறிவில்விருத்தியடையும் நோக்கமாகப் பிரான்சுப் பாஷையைத் தொடர்ந்து கற்று இதிலும் இங்கிலிசிலும் அநேக நல்ல நூல்களை

வாங்கி ஒழிந்த நேரமெல்லாம் இவைகளைப் படித்துக் குறிப்புகள் வைத்துக் கொண்டும் வந்ததைக் கண்ட சகோதர உத்தியோகஸ்தர்கள் இவரைப்பாதிரியார் என்றும் குருவானவர் என்றும் தமாசாய்ச் சொல்லி வருவார்கள். ஆயினும் அக்காலத்தில் குருவாய்ப் போகும் எண்ணம் இவர் மனதில் உதித்திருக்கவில்லை. அக்காலத்திலேதான் அச்சுவேலியிலுள்ள "சுற்றிவரும் புத்தகசாலைக்"காக யேசுநாதரின் திரு அலுவல்கள் என்ற பெயரோடு இங்கிலிசிலிருந்து ஒரு சிறுநூற்பாகத்தை மொழிபெயர்த்து அனுப்பினதோடு "பிரிவினை மதங்களும்பைபிளும்" என்ற தமது நூலுக்குக் குறிப்பெழுதிக் கொண்டும் வந்தார்.

ஞானப்பிரகாசர் குருமடத்தில் சேர்ந்தபின் வேத விருத்திக்காக உழைப்பதற்கு ஏற்ற பல தருணங்கள் கிடைக்கலாயின. பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்காகத் தாம் எழுதக் கைவிட்டிருந்த நூல்களைத் தொடர்ந்து எழுதிக் கொண்டுவரவும், கடிதமூலமாய் உணர்த்திவந்தவர்களோடு இன்னும் கடிதப்போக்குவரவு செய்யவும் அவருக்குத் தாராளமாய் இடங்கொடுக்கப்பட்டது. குருமடத்திலும் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் ஞானஉபதேசம் படிப்பித்தல், வண. பிளசோச் சுவாமியாருடைய பூசைப்பரிசாரகர் சபையை நடத்துவதற்கு உதவியாயிருத்தல், மறியற்காரருக்கு உபதேசித்தல் ஆதிய இத்தொண்டுகளெல்லாம் இவருக்குச் சிறுவந்தொட்டு இருந்த பிறாத்தும ஈடேற்றவாஞ்சையைத் தீர்ப்பதற்கு நற்தருணங்களாயின. மறியற்கூடத்திலே சிங்களவருக்கும் உபதேசம்செய்யவேண்டுமென்ற நோக்கமாய்ச் சிலமாசங்களுட் சிங்களப் பாஷையையுங்கற்று அதில் சிறு பிரசங்கங்களை எழுதிப்படிக்கத்தக்கவரானார்.

குருத்துவ அந்தஸ்தில் சேரு முன்னமே, ஆரும்பட்டத்தோடு பிறதர் ஞானப்பிரகாசருக்குக் கோவிலிலே பிரசங்கம் பண்ணும் உத்தரவு கிடைப்பதாயிற்று. 1901-ம் ஆண்டு மேற்றிராசனக் கோவிலில் நடந்த மகா ஞான ஒடுக்கத்தில் இவர் குருப்பட்டம் பெறுமல்இருந்து கொண்டே செய்தவேலை எவ்வளவென்று அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். படிப்பில்லாத நூற்றுக்கணக்கானேருக்கு பல நாட்களாய் ஞானேபதேசஞ் செய்தும், ஞான ஒடுக்கப் பிரசங்கங்கள் பண்ணியும், ஞானக் கீர்த்தனங்களை இயற்றி விசுவாசிகளுள் அதிகமானேர் அவற்றைப் பாடப் பழக்கியும், அந்த ஞானஒடுக்கத்தின் திருச்சடங்குகளுக்கு உயிராயிருந்த வண. மாங்கோச் சுவாமியாருக்கு வலக்கையாய் நின்றும் உதவியவர் இவரே, கிறீஸ்தவர்களுள் அந்நாட்களிலுண்டுபட்ட பத்தியருட்சியினல் "சற்பிரசாதநாதருக்கு நித்திய ஆராதனை" என்ற மகா கூட்டம் உண்டாவதற்கு முக்கிய காரணமாயிருந்தவரும், இளம்பெண்களுக்கு வேதக்கல்வியும் கைத்தொழிலும் பழக்குகின்ற ஒரு சமாசத்தை அடியிட்டவரும் இவரே. மேற்றிராசனக் கோவிற் பகுதிகளுள் ஆங்காங்கு மறைந்திருந்த பிறசமயிகளுள் எழுபது எண்பது பேரை அந்நாட்களில் தேடிப்பிடித்து வேத சத்தியங்களைப் படிப்பித்து வண. மாங்கோச் சுவாமியார் கையால் ஞானஸ்நானங் கொடுப்பித்தவரும் இவரே.

குருப்பட்டத்தின்பின் வேதத்தை விருத்தியாக்கும் வேலையில் உழைக்க இவருக்கு இன்னும் அதிகமான தருணம் கிடைத்தது. முதல் வருஷத்திலேயே வண. பூலாங் சுவாமியாராகிய கட்டளைக் குருவின் அனுமதியோடு பண்டியன்தாழ்விற் பல வேளாள குடும்பங்களைச் சத்திய மறையிற் சேர்த்து அங்கு சந்தாணமாதாவின் புதிய கோ

விலுக்கும் அடியிட்டார். அடுத்தவருஷம் ஊர்காவற்றுறை கட்டளைச் சுவாமியாருக்கு உதவியாய்ப் போய், அங்கு கிறீஸ்தவர்களுள் குலைந்து கிடந்த கூட்டங்களை உயிர் கொடுத்து எழுப்பி நடப்பித்தும், ஞான ஒடுக்கங்கள் பிரசங்கித்தும், கிறிஸ்தவர்களுள் ஓர்போதுமில்லாத பக்தி யருட்கிளை உண்டாக்கி விட்டதோடு, சில பிறசமயிகளை யும் வேதத்திற் சேர்க்கலானார். இவர் நாட்களிலேதான் அங்கிருந்த திரு இருதயக் கூட்டம் பாஷிகங்களாலும், வேதவேலை முயற்சிகளாலும் சிறப்புற்று விளங்கியது. இவரே அந்தக் கூட்டத்தாரின் உதவியோடு அங்கு ஒரு வாசிகசாலையை நவமாய் ஏற்படுத்தி, அந்நாளில் வழங்கிய சகல சத்தியவேதத் தமிழ்ப் புத்தகங்களையும் பத்திரிகை களையும் அதற்காகத் தருவித்து வைத்தார்.

மீண்டும் மேற்றிராசனக்கோவிலில் உதவிக் குருவாய் வந்திருக்கையிலேதான் மகா கனம்பொருந்திய யூலனாண் டவர் இவரைப் பிறசமயிகள் மத்தியில் வேதத்தைப் போ திக்கும் அலுவலில் நியமித்து விட்டார். அப்போது அர்ச். ஆசிர்வாதப்பர் கோவிலுக்குச் சேர்ந்த 50 பெயருக்குட் பட்ட சின்ன மந்தையும், கோப்பாய்நீர்வேலி என்னுமிடங் களிலிருந்த 150 கிறிஸ்தவர்கள் வரையிலுமே பிற்காலம் நல்லூர் மீசாம் எனவந்த விசாரணைப் பிரிவின் சனத்தொ கையாம். இரண்டொருவருஷத்துள் நாவற்குழி,சாவகச் சேரி என்னும் பழைய இடங்களும் ஏறக்குறைய 100 கிறிஸ்தவர்களோடு இந்த நல்லூர் மீசாமில் சேர்க்கப் பட்டன. ஆகவே 1905-ம் ஆண்டளவில் நல்லூர் மீசாம் கணக்கில் சேர்ந்தகிறிஸ்தவர்களின்தொகை 300 அளவில் மாத்திரமேயிருந்தது. கோவில்களும் ஐந்து மாத்திரமே. இன்றைக்கு 20 வருஷங்களுக்குட்பின்,நல்லூர்மீசாமையும் அதிலிருந்து பிரித்தெடுத்து புதிதாய் உண்டாக்கிய சுண்

டிக்குழி மீசாமையும் பார்க்கும்போது, கிறிஸ்தவர்களின் தொகை 2500வரையிலும்கோவில்கள் அல்லது மிஷன்ஸ்தானங்களின் தொகை 24உம் ஆகிறது. இந்தக் கணக்கு சுவாமி ஞானப்பிரகாசர் இருபது வருஷங்களுட் செய்து முடித்திருக்கிறவேலைக்குப் பிரசித்தமான ஒருசாட்சியாம்.

மிஷன் ஸ்தானங்களென்றோம். இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் பெலத்த கிறிஸ்த கிராமத்துக்கு வித்து என்று சொல்லலாம். இவைகளைச் சரியாய்ப் பரிபாலித்து வந்தால் பிற்காலம் ஒவ்வொன்றிலும் ஐஞ்ஞூறு ஆயிரம் கிறீஸ்தவர்கள் விளங்குவார்கள். பண்டியன்தாழ்வு, சிவியாதெரு ஆகிய இடங்களில் மனந்திரும்ப வேண்டிய சனங்கள் ஏராளமாயுண்டு. யூலனூராதிய இடங்களில் புதுக் கிறீஸ்தவர்கள் போய்க் குடியேறுவதற்குப் போதிய நிலங்கள் வாங்கி விடப்பட்டிருக்கின்றன. (இந்த யூலனூர் மகாகனம் பொருந்திய யூலனண்டவருடைய ஞாபகார்த்தமாகச் சுவாமியார் உண்டாக்கி வரும் ஒரு புதிய ஊர் என்றதை இங்குகுறிக்கத்தகும்) மர்கியப்பிட்டியைப் போன்ற ஸ்தானங்களில் வேலைசெய்ய நேரமில்லாத குறையொழிய சனங்கள் படிப்படியாக வந்து சேராத பாடில்லை. வரணி தாவளை யற்றாலை எனும் இவைகள் சற்றுச் சற்றாக வேலை செய்வதற்கென்று கோலிவைக்கப்பட்ட இடங்கள். இப்படியே வேலை செய்வதற்கென்று வாங்கிவிட்ட நிலங்கள் புத்தூர், சரசாலை, அல்லாரை எனும் இடங்களிலிருக்கின்றன. நிலமில்லாமலே நெடுநாள் வேலை செய்து வைத்த இடங்களுமுண்டு. இவை காரைதீவு, வட்டுக்கோட்டை, அராலி, மந்துவில், நாவற்காடு முதலியவைகளாம்

## துன்ப துயரங்கள்.

வரவுரச் சமய அபிமானங் கொண்டு நிற்கும் பிறசமயிகள் அடர்ந்த உள்நாடுகளிலே, ஒருபழையவேதக்காரருமில்லாத இடங்களிலே வேதத்தை நுழையப் பண்ணுவ

தென்றல் இலேசான காரியமா? நாலைந்து பழைய வேதக்காரக்குடிகளாவது உள்ள ஒரு இடத்தில் புதிதாய் ஒரு கோவிலை உண்டாக்குவது அரிதல்ல. இப்படியே பிறகுருமார் பிற இடங்களில் பழைய கிறிஸ்தவர்களை அண்டி இரண்டொரு புதுக்கோவில் புதிதாய் ஸ்தாபித்ததுண்டு. ஆனால் சுவாமி ஞானப்பிரகாசருக்கு இயல்பான தைரியமும் சர்வேசுரன் பேரில் நம்பிக்கையும் உள்ளவர்கள் மாத்திரம் "சைவக்கோட்டைகள்" என்று சொல்லப்படத்தக்க திருநெல்வேலி, உரும்பிராய், வண்ணார்பண்ணை முதலிய இடங்களில் புகுந்து வேதத்தை உண்டாக்கக் கூடியவர்கள். அதுவும் "பாடின்றிப் பட்டமில்லை" என்றபடி அநேக துன்ப துரிதங்களைச் சகித்தே செய்து முடிக்க வேண்டிய ஒருவேலை.

திருநெல்வேலியில் சுவாமி ஞானப்பிரகாசர் ஒரு காணித்துண்டைக் குத்தகைக்கெடுத்து வசித்து இரண்டொரு குடியை வேதமாக்கிக் கொண்டு பின்பு நிலையான ஒரு இடத்திலே ஒரு "கொட்டிற் கோவி"லைப் போடவே, சைவர் மும்முரங் கொண்டு குதித்தெழுந்து அவருக்குப் பலவிதமான சோலிகளை உண்டாக்கத் துவங்கி விட்டார்கள். அந்தக் கோவிலில் முதன்முதற் திருநாள் நடத்தி இவர் பிரசங்கஞ் செய்ய, சைவர் அதற்கெதிரே தாங்களுமொரு கொட்டிலைப் போட்டு நாலைந்து பிரசங்கிமாரைக் கொண்டுவந்து வைத்து சுவாமியார் பிரசங்கஞ் செய்யும் வேளையிலே தாங்களும் குரவையிட்டுப்பேசி கைகொட்டிச் சிரித்தும் வருவோர் போவோரை நையாண்டி பண்ணியும் கொண்டிருந்தார்கள். திருநெல்வேலியிற் போலவே பின்பு கோட்டைக்காட்டிலும் மல்லாகத்திலும் சைவர் எதிர்க் கொட்டில் போட்டுக் கலகம் விளைத்தார்கள். ஆத்திரமும் அபாயமுமான இந்த வேளைகளிலெல்லாம் சருவேசுர

ணிலே நம்பிக்கை வைத்துக்கொண்டுபொறுமையாயிருந்து வேலைசெய்ததினலேயே இந்தப் புது மிஷன்ஸ்தானங்கள் விர்த்தி அடையலாயின.

உரும்பிராயில் வேறொரு வகையான நெருக்கிடை நடந்தது. இங்கே சுவாமி ஞானப்பிரகாசர் போய் கொட்டில் கட்டிக்கொண்டிருக்கையில், சைவர் புதுக்கிறிஸ்தவர்களை அடித்தும் ஆக்கினை பண்ணியும் அவர்கள் குத்தகைக்கு வாங்கியிருந்த தோட்டங்களைமறித்து அவர்களைப் பட்டினி கிடத்தியும் நெருக்கிடைபண்ணிக்கொண்டுவந்ததோடு, அவர்கள் வேதத்தில் சேருவதற்குக் காரணமாயிருந்த சுவாமியாரையும் துவக்கினுற் சுட்டுத் தொலைத்துப்போட ஆயித்தமாயிருந்தார்கள். வேறொருநாள் இவரை வழிமறித்து அடித்துக்கொல்ல எத்தனித்திருக்கையில் தேவாதீனமாய்த் தப்பிவிட்டார். இன்னும் தாங்களே கலகத்தை உண்டுபண்ணியவர்கள், இவர் தாமஊரைக் குளப்புகிறுர் என்று அரசாட்சியாருக்கும் முறையிட்டார்கள். சுவாமியாருக்கு நேரிடக்கூடிய விபத்தை உன்னி சிற்சில பழையகிறிஸ்தவர்கள் அவரை அங்கிருக்க வேண்டாமென்று மன்றுடிக் கடிதமெழுதினுர்களே ஒழிய க் கிட்டப்போய்க் கையுதவி செய்யத் துணியவில்லை. உரும்பிராயில் வேதத்தை உண்டாக்க உத்தரவுகொடுத்து இவரை ஆசிர்வதித்து அனுப்பிய மேற்றிராணியார் கூட அரசாட்சியார் என்னசெய்வார்களோ என்று சற்றே யோசனை பண்ணத் தொடங்கிவிட்டார். ஆயினும் சுவாமி ஞானப்பிரகாசர் "கடவுள்மேலே தம் கவலையைப்போட்டு" அஞ்சா நெஞ்சராய் நின்று வேலைசெய்தபடியால் பின்பு மேற்றிராணியாண்டவர் அங்கு போய் ஒரு நாளில் 107 பெயருக்கு ஞானஸ்நானங்கொடுக்கத்தக்கவரானுர். உரும்பிராயில் பின்னுமொருமுறை ஊரவருடைய கலாபனை





*Photo by A. W. & Co.*

உரும்பிராய் சம் மிக்கேல் கோவில்.

நடந்தபோது புதக்கிறிஸ்தவர்கள் சற்றேனும் பின்வாங் காமலே உறுதியாய் நின்றுவிட்டார்கள். இன்றைக்கு அவர்களுடைய இடம் 200 பெயர்கொண்ட ஒரு சிறந்த கிறிஸ்த கிராமமாய் விளங்குகிறது. இங்குநடந்த நெருக் கிடைகளைப்போலப் புன்னாலைக் கட்டுவனிலும், கச்சாய், தேவர்கட்டு முதலிய இடங்களிலும் நடந்தன. பிந்திச் சொல்லிய இடத்தில் சுவாமியாருக்குவெளிக்கிணறுகளில் தண்ணீர் அள்ளவிடாது மறித்தும், கிணற்றுள் பாம்பை யடித்துப்போட்டும், தமது கொட்டிலுட் படுத்திருக்கும் போதே அர்த்த சாமத்தில் கொட்டிலுக்கு நெருப்பு வைத்து ஆட்களையும் கொட்டிலையும் ஒருங்கே அழிக்கப் பார்த்தும், அங்கு கோவில் கட்டப்படாதென்று அரசா ட்சியாருக்கு மனுப்பண்ணியும், ஏசன்றரையும் பொலிஸ் சுப்பிறீன்றனையும் கொண்டுவந்தும் பத்திரிகைகளில் பல அபாண்டங்களை எழுதியும், புதுக்கிறிஸ்தவர்கள் பேரில் கள்ள வழக்குகளை வைத்தும், அவர்களுக்கு ஊரெங்கும் வேலைகொடாமல் மறித்தும், பல அநியாயங்களைப்பண்ணி னார்கள். கோவில் சுடுதல், கள்ளவழக்கு வைத்தல், வேலை மறித்தல், என்ற இந்த உபாயங்களை சைவர் இங்குமாத் திரமல்ல வரணி, நாவற்காடு, பண்டியன்தாழ்வு, கோப் பாய், தாவளையற்றுலை, மட்டுவில் முதலிய வேறு பல இடங்களிலும் சுவாமியாருக்கு எதிராக எடுத்தாண்டிருக் கிறார்கள். இவைகளால் வந்த நட்டங்களைப் பொறுத்து, அலைக்கழிவுகளைச் சகித்து, மானபங்கங்களைக் கைக்கொ ண்டுதான் சுவாமி ஞானப்பிரகாசர் கிறீஸ்துநாதருக்கு ஞானப்புத்திரர்களைப் பெறுகிறவரானார்.

வண்ணார்பண்ணையில் எதிரிகள் இன்னும் வேறொரு விதமாய் வேலை செய்தார்கள். அங்கு சுவாமி ஞானப்பிர காசர் சில குடும்பங்களை வலவே சத்தியவேதத்திற் சேர்த்

திருக்க, தூக்குக்குத் தீர்ந்த ஒருவனுடைய தீர்வையை மாற்றுவதில் சுவாமியார் சற்றே பிரயாசை எடுத்துக் கொண்டமையினுல், இவர் சனங்களை ஏமாற்றி வேதத்திற் சேர்க்கிருர் என்று பத்திரிகைகளில் அவதூறு பேசியும், புதுக்கிறிஸ்தவர்களின் மனதைப் பழுதாக்கப் பல பசப்பு வார்த்தைக்காரரை வீடுவீடாயனுப்பியும் சைவர் கலகம் விளைத்தார்கள். இவ்வாறே பத்திரிகைகளில் சொட்டை சொல்லுவதோடமையாமல் சுவாமியாருடைய கீர்த்திக்கு பழுதான கதைகளைப் பரப்பியும் துராகிருதமான ஆரோ பனைகள் நிறைந்த குப்பிகளை அடித்துப் பரப்பி விட்டும் மகிழ்ந்தார்கள். சண்டமாருதம்போல எழுந்து வந்த இந்த அபகீர்த்திகளை எல்லாம் சுவாமியார் மவுனமாய்ச் சகித்ததற்கு பிரதிபலனைப்போலும், சருவேசுவரன் அந் தந்தந்தச் சந்தர்ப்பங்களிலே திரளான மனந்திரும்புதல் களைக் கொடுததிருக்கிருர் என்று கண்கூடாய்க் காண் கிறேம்.

தூக்கு விலக்கிய தயவிலிருந்து சைவரால் உண்டான கலாதி ஒன்று காமிதை எழுதிக்கொண்டிருக்கும் இவ் வேளையிலும் நடந்து வருகின்றது. சேனுதிஇராசா என்ற வரைக் கொன்ற இராணமடுக் கொலை வழக்கிலே கிரசாக் கினைக்குத் தீர்ந்த மறியற்காரருடைய இனத்தவர்கள், அத் தீர்வையை மாற்றுதற்குத் தங்களால் ஆன ஓட்டம் எல் லாம் ஓடி ஆற்ருமல், கடைசியாய் சுவாமிஞானப்பிரகாசரே தஞ்சமென்று வந்து விழுந்தார்கள். இவரும் காரியத்தை விசாரித்துப்பார்த்தபின், முழுதுங் குற்றவாளிகளல்லாத சிலருக்கும் தூக்குக் கிடைக்கப் போகின்றதே என்று கண்டிரங்கி, அத்தீர்வையை மாற்றிவிடத் தம்மாலான தெல்லாம் பார்ப்போமென்று வாக்குப்பண்ணிவிட்டார். பிறகு அந்த இனத்தவர்கள் எங்களுக்கு ஒரு உதவியுஞ்

செய்திராததெய்வங்களை இனி நாங்கள் தொழுவதில்லை, மெய்யான கடவுள் ஒருவரையே தொழப்போகிறோம், எங்களை வேதத்திற் சேர்த்துவிடும் என்று நெருக்கிக் கேட்க, சுவாமியார் நீங்கள் வணக்கம் படிக்க மூன்றுமாத மாகுதல் செல்லும், உங்களை நம்பி இந்த அனுவலில் இறங்கமாட்டேன் என்று மறுக்க, அவர்கள் நாங்கள் என்ன பொறுப்புக் கேட்டாலும்தருகிறோமென்று சொல் லிச் சில உறுதிகளை இவர்பேருக்கு அறுதியாக்கிவிட்டார் கள். இருபத்தைந்து குடிவரையில். வேதத்துக்குப்போகி றதே என்று கண்ட சில எதிரிகள் கொந்தளித்தெழுந்து, சுவாமியார் காணியில் ஆசைப்பட்டுத் தூக்கு விலக்கு கிறேன் என்று கைக்கூலி வாங்கிக்கொண்டார், ஐந்து பெயருக்கு தூக்கு விலக்கி இரண்டு பெயரை தூக்கவிட் டிட்டார் என்று இல்லாததெல்லாம் சொல்லிக் கொழும் புப் பத்திரிகைகளிலே வைத்து முழக்கிவிட, இலங்கை முழுதும் மாத்திரமல்ல அரசாட்சியார் தாமும் சுவாமி யாரில் சந்தேகங் கொள்ளத்தொடங்கலானார்கள். இந்தப் பெரிய அவமானம் என்கிற கருமுகில் தம்மை மறைத் திருக்கிற இந்த வேளையிலும் இவர் மனங்கலங்காமல் முக மலர்ச்சியோடிருந்து "இதுதான் ஆண்டவர் எனக்குத் தந்திருக்கிற வெள்ளியூபிலிக் கொண்டாட்டம்; இதை நான் சகிப்பதினால் ஒரு ஆத்தும மாகுதல் ஈடேறுமானால் எனக்குப் போதும்" என்று சொல்லக் கேட்டோம்.

சைவாதியோரால் ஓயாமல் வந்துகொண்டிருக்கிற அவதூறுகள் ஒரு புறமென்றால், யோசனை இல்லாத கிறிஸ் தவர்களால் சொல்லப்படுகிற ஆவலாதிகளும் சுவாமி ஞானப்பிரகாசருக்குப் பெரிய பாரச்சிலுவை ஆகிறது. இவர் எளிய பள்ளர் பறையர் ஆகியோரைத்தானே அதிக மாய் வேதத்தில் சேர்க்கின்றார்? பெரிய சாதிக்காரர்

தொகையாய்ச் சேருகின்றார்களா? இனி, பெருந்தொகை யான பணங்களைக் கொடுத்துத் தானே ஆட்களைப்பிடிக் கின்றார்! வேதத்திற் சேருகிறவர்கள் எங்களைப்போல அடிக்கடி பாவசங்கீர்த்தனம் தேவநற்கருணை இவைகளைப் பெற்று, அதிகமாய் யாத்திரைத் தலங்களுக்குப்போய் வருகிறதாய்க் காணோமே! பெரிய பெரியமுறடர்களை ஏன் வேதத்திற் கொண்டுவருவான்? இதெல்லாம் வீண்வேலை தானே. ஊரிலே இவரைப்பற்றி இவ்வளவு கொந்தளிப்பு வரக்காரணம் என்ன? இவர் போன எந்த இடத்தில் குழப்படி வராமலிருக்கிறது! இதெல்லாம் எங்களுக்குப் பெரிய அவமானமாகிறதே. சும்மா பழைய வேதக்கார ரைப் பார்த்துக்கொண்டிருந்தால் இவரை நாமெல்லாரும் புகழுவோமே என்றிப்படிப் பலவிதமாய் வேதக்காரர் தாமேபேசுவது எவ்வளவு அவதைரியத்துக் கிடமாகும்! ஆயினும் சுவாமி ஞானப்பிரகாசர் தமக்கியல்பான அஞ்சா நெஞ்சோடு சத்துருக்களால் வருமிடையூறுகளையும் சகோ தரர்கள் சொல்லும் ஊக்கங்கெட்ட வார்த்தைகளையும் கவனியாமல் சருவேசுரன் ஒருவரையேநம்பி வேலைசெய்து கொண்டு வந்திருக்கிறார்.

பெருந்தொகையான பணங் கொடுத்து ஆட்களைப் பிடிக்கிறார்என்றுகிறிஸ்தவர்கள் தாமும் ஆவலாதிசொல்ல, சுவாமி ஞானப்பிரகாசருக்கு தம்முடைய ஆத்துமத்தை யும் சரீரத்தையும் ஒன்று கூட்டி வைத்துக் கொள்ளத் தானும் பலமுறையும் பணமில்லாமலிருப்பதே பெரும் வேதனை யென்றதை அவரோடு அளவளாவி நடந்திருப் போரெல்லாம் அறிவார்கள். பணங்கொடுத்து யாரையா வது வேதமாக்கலாம் என்றெண்ணுவதும் பெருந்தப்பித மென்று இங்கு குறிக்கக் கடவோம். பத்துப்பவுண் பதி னைந்து பவுணுக்கு ஓர் ஆள் பிடிக்கலாமா? பிடித்து வைத்



*Photo by A. W. Co.*

சுவாமி S. ஞானப்பிரகாசர் வேதோபதேசஞ் செய்கிறார்

தாலும் அந்தப்பணம் முடிய ஆளுடைய வேதமும் முடிந்து போமே. பின்னும் சுவாமி ஞானப்பிரகாசர் கையால் வருஷந்தோறும் ஐம்பது நூறு என்று வேதத்திற் சேருவோருக்குக் கொடுப்பதானால் வருஷத்திலே எத்தனை பவுண் வேணும்? ஆயிரத்தஞ் ஞூறு பவுண் வேண்டாமா? இவ்வளவு சாசையும் மேற்குறித்த ஆவலாதியைச் சொல்லுகிறவர்கள் தாம் இவருக்குக் கொடுத்து உதவி வருகிறார்களா? இது எவ்வளவு தப்பிதமான ஒருஎண்ணம்! உள்ளபடி நடக்கிறது என்னவென்றால், சுவாமி ஞானப்பிரகாசரால் வேதத்திற் சேர்க்கப்படுகிறவர்கள் பணம் வாங்கிக்கொண்டல்ல, எவ்வளவோ பொருள்பண்டங்களை இழந்து நஷ்டமடைந்து கொண்டுதான் வந்து சேருகிறார்கள். இருந்த இடங்களால் துரத்தப்பட்டும், செய்த பயிர்ப்புரோசனங்களையிழந்தும், கொடுத்துவைத்த கடன்களைப் பறிகொடுத்தும், பசிபட்டினிகளை அனுபவித்துக்கொண்டுமே பெரும்பாலானவர்கள் வேதத்திற் சேருகிறார்கள். புதுக்கிறிஸ்தவர்களுக்கு எறக்குறைய எப்போதுங் கஷ்டங்கள் நேரிடுகின்றன. இந்தக் கஷ்டங்களின் நடுவே திருச்சபையாகிய மாதா தன் பச்சைக் குழந்தைகளுக்கு இரங்காமல் இருப்பது நீதியா? நீதியல்லவே. இதினாலே தான் புதுக்கிறிஸ்தவர்கள் பசியால் வருந்தும்வேளைகளில் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் பசியைத் தீர்க்கத் தம்மால் இயன்றதைச் செய்வாரே ஒழிய, பணங்கொடுத்து யாரையாவது வேதத்திற் சேர்க்கிறார் என்பது அறியாமையால் எழுந்த ஓர் எண்ணமேயாம்.

கஷ்டப்படுகிற புதுக்கிறிஸ்தவர்களுக்கு உதவிசெய்வது ஒரு செலவென்றால், இதற்கு மேற்பட்ட வேறு பெருஞ் செலவுகளுஞ் சேர்ந்து தம்முடைய சாப்பாட்டிற்கே பலமுறையும் வழியற்றிருக்கிற இவரது சுமை

பெருஞ்சுமையும் கலக்கம் பெருங்கலக்கமுமாகும். ஓர் புது இடத்தில் வேதத்தை ஸ்தாபிக்கிறதானல் அவ்விடத்தில் ஓர் நிலம் வாங்குவது ஒரு செலவு; அதில் கொட்டில்கள் போடுவது ஒரு செலவு; உபதேசிமாரை அங்கனுப்பி வேதத்தைப் படிப்பிப்பது ஒரு செலவு; கலகங்கள் கள்ள வழக்குகள் உண்டாகிறபோது அவைகளைக் கழற்றிக் கொண்டு வெளியேறுவது ஒரு செலவு; இனிக் கோவிலுண்டாகும்போது அதற்குரியதளபாடங்களைத்தேடுவது ஒரு செலவு; புதிதாய் உண்டான இந்த ஒரு இடம்போக இதற்கு முந்திய இடங்களைப் பார்ப்பதற்கோ, கொட்டில்களை மேய்வதற்கோ, பகைவர் நெருப்பிட்டுச் சுட்டவைகளைப் புதிதாய்க் கட்டுவதற்கோ, அவர்களால் நேர்ந்த வழக்குகளை ஆடுவதற்கோ, பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கோ, வருஷா வருஷங்கூடிக்கொண்டுவருகிற செலவின் கணக்கென்ன? பிள்ளை காய்க்கத் தொடங்குமுன் தென்னந்தோட்டத்திற்குப் பண்ணுகிற பெருஞ் செலவுகளைப் போலவே இந்தப் புது இடங்களுக்குப் பணச்செலவுகள் உண்டாகிறதே ஒழிய வேதத்திற் சேருவோருக்குச் சம்பளங் கட்டுவதற்காக ஒரு செலவும் உண்டாகிறதில்லை என்பது சற்றே கருத்தாய் ஆராய்கிறவர்களுக்கெல்லாந் தெட்டத் தெளிவாகும்.

பணச்செலவே சுவாமிஞானப்பிரகாசருக்குப்பெருஞ் சுமையுங் கலக்கத்துக்குக் காரணமும் என்றோமே. இப் பணமெங்கிருந்து வருகின்றது? மேற்றிராசனம் வேதப் பரப்புதல் வேலைக்காகக் கொடுக்கிறதோ ஒரு சொற்ப தொகைதான். மிஞ்சியதையெல்லாம் சுவாமி ஞானப்பிரகாசர் எத்தேசத்திலும் அமெரிக்கா முதலிய பிறகத்தோலிக்க தேசங்களிலும் பிச்சை எடுக்க வேண்டியவராகிறர். பிச்சைக்காரர் அவ்வவ்விடங்களிலே படுகிற அவமானம்,

கலக்கம், வெட்கம் இவற்றையெல்லாம் தாமும் பலமுறை படவேண்டியவராகிறார். பட்டும் இந்தப்பிச்சையிரப்பினால் 2500 புதுக் கிறிஸ்தவர்களைக் கொண்ட ஓர் பெரிய மிசாமைப்பாதுகாத்தும் 20,000 ரூபாவுக்கு மேற்பெறு மதியான பல ஏக்கர் காணிகளைக் கோவில்களுக்காகவும் ஏழைகளைக் குடியிருத்துவதற்காகவும் அங்கங்கே வாங்கி விட்டும், பல கொட்டிற்கோவில்கள் பள்ளிக்கூடங்களைப் போட்டும், 30,000 ரூபாவரையில் செலவிட்டு நான்கு கற்கோவில்களைக் கட்டி எழுப்பியும் விட்டிருக்கிறார்.

## உதவிக்குருமாராதியோர்.

சுவாமி ஞானப்பிரகாசர் பட்ட அரும் பிரயாசங்களிலே பக்கத்துணையாயிருந்து இவரோடு காலத்துக்குக் காலம் உழைத்து வந்த உதவிக்குருமாரைப் பற்றியும் இங்கு ஒரு வார்த்தை சொல்லுவோம். வண. ஆசிர்வாதம் சுவாமி, தாம் குருப்பட்டம் பெறுமுன் இவரோடு சில காலமும், பெற்றுப் பருத்தித்துறை விசாரணையை நடத்தியபின் சில காலமும் இவருக்குத் துணையானார். மங்களூர்ப் பிராமண குலத்தவருள் ஒருவரான காலஞ்சென்ற வண. வாஸ்சுவாமியும், காலஞ்சென்ற வண. உவில்லியம் சுவாமியும் இவ்விரண்டு வருஷம் வரையில் துணை செய்தார்கள். வண. ஜே. பிரான்சிஸ்சுவாமி, வண. வெனடிற் சுவாமி, வண. ஆபிரகாம் சுவாமி என்பவர்கள் ஒவ்வொரு வருஷம் உதவி புரிந்தார்கள். வண. நீக்கிலாஸ்சுவாமி இருமுறை துணைச்சுவாமியானார். இவரோடுகூட இருந்து கஷ்டப்பட்டுப் பழகினவர்களெல்லாம் இன்றைக்கு அரும் பிரயாசையோடு பிறராத்தும ஈடேற்றவேலை நடத்துவதையும் பிறசமயிகளைத்திருப்புவதிலோ, பிரசங்கத்திலோ, தமிழறிவிலோ வல்லவர்களா யிருப்பதையும் காணலாம். விசேஷமாய் வண. ஆசிர்வாதம் சுவாமி குடத்தனையிலே

பிறசமயிகள் மத்தியில் புதிதாய் ஓர் கோவிலுண்டாக்கின மையும், வண. பிரான்சீஸ்சுவாமியும் அப்படியே நாகர் கோவிலில் பலரை மனந்திருப்பிக் கோவில்கட்டினமையும் இங்கு குறிக்கத்தக்கது.

சுவாமி ஞானப்பிரகாசருடைய துன்ப துரிதங்களி லெல்லாம் தைரியம் கொடுத்து ஊக்கித்துவிட்டது முதன் முதல் தேவ வரப்பிரசாதமே என்பதில் மயக்கமில்லை. "நீங்கள்போய் சகல சாதி சனங்களுக்குஞ் சுவிசேஷத் தைப் போதியுங்கள், இதோ நாம் உலகமுடிவு பரியந்தம் உங்களோடிருக்கிறோம்" என்று சத்தியவேத குருப்பிர சாதிகளுக்கெல்லாம் வாக்கருளப்பட்டதேவ திரு உதவிப் பெலமே உலகத்தினெத்திசையிலுமுள்ள பிற வேதபோத கரைப்போல இவரையும் கைதூக்கி நடப்பித்துக்கொண்டு வந்திருக்கிறது. இரண்டாவதாக, தம்முடைய மேற்றிரா சனத்தில் எங்கும் வேதத்தைப் பரப்ப வேண்டுமென்று கொண்ட தணியாத ஆசையினால் இவருடைய திருச் சபைத் தலைவராகிய மகா கனம்பொருந்திய யூலனண்ட வரும், விக்கார் ஜெனறலாயிருந்த அதி வண. கெர்லின் சுவாமியாரும் இவரை எக்கருமத்திலும் ஊக்கித்து வந்த தினால், எவ்வளவுகஷ்டமான அலுவலிலேயும் பயமின்றித் தலைப்போடக் கூடியவரானார். யூலனண்டவருக்குப் பின் வந்த மேற்றிராணிமாரும் மேற்றிராசன பரிபாலகரா யிருந்த அதி வண. கிற்றோ சுவாமியாரும் அவ்வாறே வேதப்பரப்புதல் வேலையை ஊக்கித்தனர். குருமார் சகலருடையவும் அனுதாபம் தம்மோடிருக்கிற தென்ற உணர்ச்சியானது சுவாமி ஞானப்பிரகாசரைத் தைரியப் படுத்தித் தாம் ஒரு கையாற் செய்யும் வேலை திருச்சபை முழுதுங் கூடிச் செய்யும் வேலையே என்ற ஒரு அவதா னத்தைப் பிறப்பித்துக்கொண்டு வந்திருக்கிறது.

இவருக்கு எப்போதும் அனுதாபங்காட்டி தைரியங் கொடுத்துக் கொண்டு வருங் குருப்பிரசாதிகளுள் ஒருவரை இங்கு விசேஷமாய் எடுத்துக் கூறாமல் விடப்படாது. அவர் யாரென்றால், வட இலங்கையிலெல்லாம் அதிக பிரஸ்தாபம் பெற்று விளங்குகிற கல்விக் கழகமாகிய சென்பத்திரிசியார் கல்லூரித் தலைவராகும் மகா வண. மத்தியூஸ்சுவாமியாரே. இவர் எந்த நிறை பூசலான எதிரிடைகளின் மத்தியிலேயும் சுவாமி ஞானப்பிரகாசரை அந்தர்தப் புது இடங்களிற் போய்க்கண்டு உற்சாகங் கொடுப்பதோடு, அந்தந்த இடங்களுக்கு தமது குருமாரை அனுப்பி ஞாயிற்றுக்கிழமைகளிற் பூசைகள் வைப்பித்தும், விசேஷமாய்த் தலைத்தானமாயிருக்கும் அர்ச். சவேரியார் கோவிலில் வருஷாவருஷம் பலகுருமாரோடும் பள்ளிக்கூடப் பிள்ளைகளோடும்வந்து கடைசிவேஸ்பரைத் தாமாகவே கொண்டாடியும் இன்னும்காலத்துக்குக்காலம் இயன்ற வேறு உதவிகளைப் பண்ணியும் வந்திருக்கிறார். சுவாமி ஞானப்பிரகாசரும் இவரில் நன்றி பாராட்டும் முகத்தால், அவ்வவ்விடங்களில் திரளாய் ஞானஸ்நானங் கொடுக்கும் வேளைகளில் மேற்றிராணியாரை அழைப்பது போல இவரையும் அத் திருச்சடங்குகளை நிறைவேற்றும்படியாக அழைத்து இவரைக் கண்ணியப்படுத்தியிருக்கிறார். வேதப்பரப்புதல் வேலையில் வலக்கை இடக்கையாய் நின்று உதவி செய்து மற்றுங் குருப்பிரசாதிகளுள் காலஞ்சென்றுபோன மகா வண. றாவலக்சுவாமியார், மகா வண. டெலான் சுவாமியார், மகா வண. வெயிறேச் சுவாமியார், வண. அந்தோனிச்சுவாமியார், வண. மார்செலின் சுவாமியார், வண. ஜே பிரான்சீஸ் சுவாமியார். வண. ஸ்தனிஸ்லாஸ் சுவாமியார் என்னுமிவர்களையும் இங்கு குறிப்பது தகுதியே.

சுவாமி ஞானப்பிரகாசருக்குப் படைத்துணை பக்கத்துணையாய் நின்ற, நின்றுவருகிற உத்தம கிறிஸ்தவர்களையும் எடுத்துக்காட்டுவது இங்கு எமக்கு மிக மகிழ்ச்சியாயிருக்கிறது. இவர்களுள் முதன் முதல் சுவாமி ஞானப்பிரகாசருக்கு எக்கருமத்திலும் உதவியாள்போல் நின்றுவருகிற சமாதான நீதவான் ஸ்ரீ மோசேஸ் சக்கிடுத்தாரையும், நல்லூர்மிசாமின் தலைத்தானமாகிய அர்ச். சவேரியார் கோவிலைக்கட்டி எழுப்புவதற்கும் வருஷாவருஷம் அதிற் திருவிழாக் கொண்டாடுவதற்குந் தாராளமாய்த் தம்பொருளைச் செலவிட்டு வருகின்ற யாழ்ப்பாணப்பட்டினத்துப் பிரபுக்களையும் எடுத்துச் சொல்லுவோம். புதுக்கோவில் உண்டாகுமிடமெல்லாம் திரளாய்ப் போயும் இயன்ற கையுதவி யெல்லாஞ்செய்ய ஆயித்தமாயிருந்துங்கொண்டு வருகிற சுன்னாகத்துக் கிறிஸ்தவர்களுடைய முயற்சியும் இங்குபாராட்டத்தக்கது. இவர்களோடு,வதிரி அளவெட்டி குளமங்கால் உடுவில் என்னுமிடங்களின் பழைய கிறிஸ்தவர்களும் சுவாமி ஞானப்பிரகாசருக்கு உதவிக்காரராய் விளங்கியிருக்கிறார்கள். பின்னும் காலத்துக்குக் காலம் சுவாமி ஞானப்பிரகாசர் வேதப்பரப்புதலுக்காகப் பிச்சை என்று போனவிடத்திலே இவருக்குத் தாராளமாய்ப் பொருள் கொடுத்துதவின பருத்தித்துறை, பாசையூர், நாவாந்துறை, சில்லாலை, இளவாலை, மாதகல், ஊறணி, மயிலிட்டி, பலாலி, செம்பியன்பற்று,தாழையடி, மண்டைதீவு என்னுமிடத்துக் கிறிஸ்தவர்களையும் இங்கு பாராட்டத்தகும்.

## பிறமிசாங்களிற் பிரசங்கம்.

திருச்சபையை விருத்தியாக்குவதிற் படும்கஷ்டங்கள் துன்பதுரிதங்கள் நடுவே சுவாமிஞானப்பிரகாசர் இம்மேற்றிராசனத்திலும் பிறஇடங்களிலுமுள்ள பழையகிறிஸ்த

வர்களுக்கும் தம்மாலியன்ற ஊழியம் செய்யாமல் விட்ட வரல்ல. என்ன என்ன அலுவலாய் எவ்வெவ் விடத்திற் போயிருந்தாலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலே சமயம் வாய்க்கும் போதெல்லாம் பிரசங்கம் செய்வதே இவருடைய விரதம் என்று சொல்லலாம். இவ்வாறே கொழும்பு முதலிய பிறவிடங்களிலெல்லாம் போகுந்தோறும் ஞாயிற்றுக்கிழமைப் பூசைகளில் எப்போதும் பிரசங்கம் பண்ணுவதே இவருடைய வழக்கம். சில வருஷங்களில் ஒரே அடியாய் ஆறேழுமாதம் ஒருநாளும் விடாமல் பிரசங்கம் பண்ணினதுமுண்டு. அதெப்படி எனில், தம்முடைய சிறுக்கோவில்களில் அடுத்தடுத்து வரும் "நோவனை" களில் ஒரு இரவும் விடாமற் பிரசங்கம் பண்ணுவார். இதனோடு வேறு மிசாங்களில் ஞான ஒடுக்கங்களுக்கோ திருநாட் பிரசங்கங்களுக்கோ அழைக்கப்படுவதினால், சில வருஷங்களில் ஒருநாளும் விடாமலே அநேகமாசமாய்ப் பிரசங்கம் நடந்ததுண்டு.

திருச்சபைச்சடங்குகளுக்கெல்லாம் பிரசங்கம் விசேஷமான ஒரு அங்கமென்று எமது நாட்களில் காட்டி வைத்தவர்கள் வண. மாங்கோச்சுவாமியாரும் அவரிடம்பழகிய சுவாமி ஞானப்பிரகாசருமே என்று உறுதியாய்ச் சொல்லலாம். ஞான ஒடுக்கங்களை மிகுதியாய் நடைபெறப் பண்ணியவரும் வண. மாங்கோச் சுவாமியாருக்குப் பின் சுவாமி ஞானப்பிரகாசரே என்று சொல்லலாம். இதில் வேறு யாராவது இவரிலும் அதிகமான ஒருபங்கை உரித்தாடக் கூடுமானால், அவர் சனாஞ்சித பிரசங்கியார் என்றும் தமது முன்மாதிரிகை என்றும் இவரால் எப்போதும் புகழ்ந்து கூறப்படும் வண. மார்செலின் சுவாமியாரேயாம். இவர்களிருவரும் பல முறைகளிலே தங்கள்மிசாங்களை உதவிக் குருமார் கையில் விட்டு விட்டு பழைய கிறி

ஸ்தவர்கள் அதிகமாயுள்ள மிசாங்களிற் போய் மகாஞான ஒடுக்கங்களைப் பிரசங்கித்து அவர்கள் மத்தியிலே விசுவாசத்தை உறுதிப்படுத்தி, தன் மாதிரிகைகளைக்கழைந்து பத்தியைக் கிள்ளி அருட்டி விட்டிருக்கிறார்கள். இப்படியே மிருசுவில், பருத்தித்துறை, வசாவிளான், சில்லாலை, மயிலிட்டி, மாதகல், இளவாலை, அச்சுவேலி, நவாலி, நாவாந்துறை, மண்டைதீவு எனுமிடங்களில் மகா ஞான ஒடுக்கங்கள் போதிக்கப்பட்டன. இவைகளைத் தவிர சுவாமி ஞானப்பிரகாசர் தனித்தும் பற்பல இடங்களில் வைத்த ஞான ஒடுக்கங்கள் பல. திருநாட் பிரசங்கங்கள் பல. தம்முடைய சொந்தச் சிறுக்கோவில்களுள் அதிகமான புதுக்கிறிஸ்தவர்கள் உள்ள இடங்களிலெல்லாம வருஷந்தோறும் ஒவ்வொரு சிறு ஞான ஒடுக்கம் வையாமல் விடார். அதுமட்டோ! தமது கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் மெய்விவாகம் அவஸ்தைப்பூசுதல் என்னும்தேவதிரவிய அனுமானங்களைப்பெறும் வேளைகளிலும் சமயோசிதமாய் ஒவ்வொரு சிறுப்பிரசங்கஞ் செய்யாமல்விடார்.

பிரசித்த யாத்திரைத் தலங்களில் சுவாமி ஞானப்பிரகாசரை, விசேஷமாய் இவர் வாலவயதில், அங்கங்குள்ள சுவாமிமார் அழைத்து பிரசங்கஞ்செய்வித்துவருவார்கள். இப்படியே பெரியமடு, சின்னமடு, புல்லாவெளி, கிளாலி என்னும் தலங்களில் இவர் பலவருஷங்களாய் நோவனைப் பிரசங்கம் முழுவதையும் செய்கிறவரானார். மேற்றிராசனக்கோவிலிலும் நெடுங்காலம் இவரே பெரியதிருநாட்களிலும் விசேஷமாய்த் தபசுகால ஞாயிறுகளிலும் பிரசங்கம் செய்ய மேற்றிராணிமாரால் அழைக்கப்பட்டார். இங்கு இவர் செய்த ஒரு வருஷத்துத் தபசுகாலப் பிரசங்கம் புத்தகரூபமாய் அச்சிலும் வெளிப்பட்டிருக்கிறது.

மருதமடுவில் இற்றைக்குப் பதினைந்து வருஷகால மாய்ச் சுவாமி ஞானப்பிரகாசர் பிறசமயிகளுக்காகவும் ஓர் முக்கியமான வேலையை நடத்திக்கொண்டு வந்திருக் கிறார். அங்கு வருஷந்தோறும் திருநாளுக்குவரும் ஆயிரக் கணக்கான பிறசமயிகளை தேவ வாக்கென்னும் ஞான உணவில்லாமற் பசியோடு திரும்பிப்போக விடப்படா தென்றுகருதி அவர்களுக்கு விசேஷபுத்தி போதகங்களைச் செய்ய மேற்றிராணியாண்டவருடைய உத்தரவை அடை ந்துகொண்டார். கொண்டு அவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளிற்போய் வேதவிஷயங்களைப் பற்றிச் சம்பாஷித் தும், விரும்பியோர் எல்லாரையும் திரளாய்க் கோவில் முகப்பிலே நிழல்மரங்களின்கீழேகூட்டி அவர்களுக்காகத் தர்க்கப் பிரசங்கஞ் செய்தும் எம்முடையதிருவேதத்தின் மகிமையை விளக்கி வருவார். இந்தத் தர்க்கப் பிரசங்கத் திலே இவருக்கு உதவிசெய்வதற்கு காலஞ்சென்ற வண. உவில்லியம் சுவாமியாரே அதிகமாகப் போய்வருவார். இவ்வித தர்க்கப் பிரசங்கங்கள் மடுவிலே மட்டுமல்ல யாழ்ப்பாணத்தின் வேறுபல இடங்களிலேயும் சுவாமி ஞானப்பிரகாசரால் வண. மார்செலின் சுவாமியாரின் உத வியோடு செய்யப்பட்டன என்பதையும் இங்கு குறிக்கத் தகும், மறு இடங்களிற் போலல்லாது மருதமடுத்தர்க்கப் பிரசங்கங்கள் உடனுக்குடனே பலன் கொடுப்பதாயிருக் கும். இங்கே இப்பிரசங்கங்களைக் கேட்போருள் பலர், இப்படிப் பட்டவர்களுக்கு வேத சத்தியங்களைப் படிப் பிக்க வென்று போட்டிருக்கும் சிறு கொட்டிலிலே படிக்க வரத் தொடங்கி விடுவார்கள். இதிலே வருவோருக்கெல் லாம் மந்திரங்களையும் பிரதான சத்தியங்களையும் படிப் பிக்க சுவாமி ஞானப்பிரகாசர் தம்முடைய உபதேசிமார் இருவரை வருஷா வருஷங் கொண்டுபோய் வைத்திருப்ப தோடு யாத்திரிகளுள் நல்ல மனமுள்ள கிறிஸ்தவர்களான

பல ஆண் பெண்களை உதவி கொள்ளுவது வழக்கம். திருநாள் முடியுந்தனையும் இந்தக் கொட்டிலின் புறத்திலே ஐம்பது நூறு பிறசமயிகள் மந்திரம் படித்தபடியே இருப்பார்கள். இவர்களுள், பல வருஷம் மடுவுக்கு வந்து, அல்லது தங்கள் தங்கள் ஊரில்வேதத்தோடு நன்றாய்ஊடாடி, மந்திரங்களையுங் கற்றிருப்போருக்குத் திருப்பதியிலே தானே ஞானஸ்நானமுங் கொடுக்கப்படும். இப்படியே வருஷந்தோறும் இவ்விடத்தில் குழந்தைகளுட்பட எழுபது எண்பது பிறசமயிகள் ஞானஸ்நானம் பெறுவதுண்டு.

மருதமடுவில் பிறசமயிகளுக்குச் செய்யப்படும்போதகங்களினுல் பல ஊர்களிலே சத்திய வேதத்திற்குச் சார்பான கிளர்ச்சி உண்டாக்கிக் கொண்டு வருகிறது. யாழ்ப்பாணத்தில் எங்கெங்கே போனுலும் சுவாமி ஞானப்பிரகாசரை அறியாத பிறசமயிகளில்லை. இதினுற் தங்களுக்குள் சத்தியவேதச் சார்புண்டாகும் போதெல்லாம் இவரையே தேடி ஓடிவருவார்கள். இப்படியே எத்தனையோ இடங்களில் இவர் பிறசமயிகளுள் மனந்திரும்புதல்களைத் தொடக்கி விடுவோரானுர். பிறகுருமாரும் திரளான மனந்திரும்புதல்களுக்கு இடமுள்ள தருணங்களில் இவரையே அழைத்து வேலை செய்விப்பது வழக்கம்.

ஏழை எளியவர்களை விசேஷமாய் சுவாமி ஞானப்பிரகாசரைத் தங்கள் பக்கவாதியாய்ப் போற்றுவார்கள். நம்முடையநாட்டில் எளிய சாதிகள் வெகுவாய்த் தங்கள் புராதன அடிமைத் தனத்திலிருந்து இன்னும் விடுதலை பெறுமல் இருப்பது நாம் எல்லாம் அறிந்த காரியமே. இந்த அடிமைத்தனத்தையும் பிசாசின் தாசிகத்தையும் ஒரே தடவையில் நீக்கிவிடுவது தான் சுவாமியாருடைய அபிலாசை. இவருடைய பிரயாசத்தினுல் எத்தனையோ

குடிகள் இப்போது சுயாதீனமாய் வாழுகிறார்கள். இவருக்குப் பயந்தும் இவருடைய வழிக்குப் போய்விடுவார்களென்று அஞ்சியும் பல ஊர்களிலே இந்நாட்களில் எளியசாதிகளை வலிய சாதிகள் நெருக்கிடை பண்ணாமல் விட்டிருக்கிறார்கள். இனி, வறுமைசிறுமை நெருக்கிடைப் பட்டவர்கள் எந்தெந்த ஊரிலிருந்தும் இவரிடம் வந்து ஆறுதலடைந்து போகக் காணலாம். தரும விஷயத்தில் எவர்க்கும் இல்லையென்ன அறியார். எவர்க்கும் கதவை அடித்துப் பூட்டார். "அடித்துப் பூட்ட எனக்குக் கதவில்லை, கொட்டில் நல்லாய்த் திறந்திருக்கிறது, வாருங்கள்" என்று எவரையும் உபசரிப்பதுதான் இவருக்கு வழக்கம். அநேகமுறை கொடுப்பதற்கு ஒரு சல்லியும் இல்லாமற் போய்விடும். காசில்லாதபோது நல்ல வார்த்தையாவது சொல்லி யனுப்புவார். உள்ள தீன்பண்டங்களையெல்லாம் எடுத்துக் கொடுத்துவிடுவதுமுண்டு.

## நாளாந்த சீவியம்.

மிகச்சுருக்கமான இச்சரித்திரத்தை முடிக்குமுன் சுவாமி ஞானப்பிரகாசரது நாளாந்தசீவியத்தைப்பற்றியும் ஒருவார்த்தை சொல்லுவோம். பிற ஊரவர்கள் இவரை இன்ன இடத்திலே காணலாமென்று குறித்துப் போய்க் கண்டுகொள்வது அருமை. எறக்குறைய ஒவ்வொரு கிழமையும் ஒவ்வோர் இடத்திலே இருப்பார் என்று சொல்லலாம். இப்போது இவருக்குத் தலைத்தானமாயுள்ள திருநெல்வேலி அர்ச். சவேரியார் கோவிலிலே மகா கனம். யூலன் ஆண்டவருடைய தயவினாலே சிலகாலமாய் ஒரு நல்ல அறைவீடிருக்கிறது. அங்கு காலைப் பூசை முடிந்தபின் போனால், தன் நாலுசுவர்ப்பக்கங்களும் புத்தக அலுமாரிகள் நிறைந்திருக்கும் ஒரு முன்னறையிலே, இவர் கடிதங்களையோ நூல்களையோ எழுதி அல்லது வாசித்

துக்கொண்டிருப்பதைக் காணலாம். ஆனால் போன ஆள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, வேறு அநேகர் புதுக் கிறிஸ்தவர்களோ, வேதத்துக்குவர ஆயத்தஞ் செய்பவர்களோ, வேறு அலுவலுள்ளவர்களோ, அடிக்கடி வந்துகொண்டிருக்கக் காணலாம். இவர்கள் ஒவ்வொருவரோடும் வேண்டிய நேரம் சம்பாஷித்து கதையோடு கதையாய் ஞானோபதேசம் படிப்பித்து புத்திமதிகள் சொல்லி அனுப்பிக்கொண்டிருப்பார். செபநேரம், போசனவேளை, நடுப்பகலிற் சற்று இளைப்பாற்றிநேரம் இவைகள் போக இரவு ஒன்பது பத்து மணிவரையும் வருவோரோடு பேசுவதும் எழுத்து வாசிப்பில் அமர்ந்திருப்பதுமே இவருடைய முயற்சி.

தலைத்தானத்தில் நல்ல அறைவீடு ஒன்று உண்டென்றோம். அங்கு இவர் செலவழிக்கிற காலம் வருஷத்தில் இரண்டொரு மாதம் மாத்திரமே. மறு இடங்களில் இரண்டொரு கோவில் நீங்கலாக அறை வீடே கிடையாது. அந்த இடங்களி லெல்லாம் கோவிலும் அறைவீடும் ஒரே சிறுக் கொட்டில்தான். இவைகளையே சுவாமி ஞானப்பிரகாசர் "கொட்டிற் கோவி"லென்றும் "மிருகஞ் சுடக்கட்டிவைத்த ஒளி" யென்றும் சொல்லிக்கொள்ளுவார். இவற்றுட் சில ஒரு நிழல்மரமுமில்லாத கானல் ஓடுகிற இடத்தில் போட்டிருக்கும். சில பொருட்குறைவினால் மழைக் காலத்துக்குப்போதிய மேய்ச்சலில்லாத ஓட்டை முகடுகளாயிருக்கும். சில "கொட்டிற் கோவில்"களின் சமீபத்தில் குடி தண்ணீரே கிடையாது. சில இடங்களில் வேண்டிய போசனபதார்த்தங்களை வாங்க வசதியிராது. இப்படியே கானலில் அடிபட்டும், மழையில்நனைந்தும், குளிப்பு முழுக்கற்றும், நல்லஉணவில்லாமலும்வருந்திக்கொண்டே சுவாமி ஞானப்பிரகாசர் தமது வேதப்பரப்புதல் வேலை




மல்லாகம் புதுமைமாதாவின் கோவில்.

யைச் செய்து வருகிறார். இவருக்கு கோக்கியும் பொடிய னும் வேலைக்காரனும் ஒருவனே. வேறு வேலைக்காரர் கிடையாது. தாமே தமக்கு வேண்டிய பணிவிடைகளெல் லாம் அதிகமாய்ச் செய்துகொண்டு, எவ்வளவு தூரத்துக் கும் தமது பைசிக்கிளில் வெயிலோ, மழையோ, எதிர் காற்றோ என்று பாராமல் பயணம் பண்ணுவார். பயணத் தில் பாவிக்கக் குடையும் வைத்திருப்பதில்லை. ஒருசப்பா த்துக்கூட்டமொழிய வேறு கூட்டமுமில்லை. உபதேசி மாரும் இப்படியே அதிகமாய் பைசிக்கிளில் பயணம் பண்ணி பாய்தலையணை இல்லாமற் படுத்து, குளிப்பு முழுக்கு அருந்தலுள்ளவர்களாய், ஆனதீன் தின்ன வசதி யற்றவர்களாய்ச் சீவிக்கிறவர்களாம். குருஎப்படி சீஷரும் அப்படியல்லவா?

சுவாமி ஞானப்பிரகாசருடைய சீவியம் இவ்வளவு கஷ்டமானதென்றாலும், அவர் இருக்கும் கொட்டில்கள் அநேகமாய் எளியசாதிகளின் இருப்பிடங்களிலே கட்டிய குடிசைகளாயிருந்தாலும், இரண்டு விஷயத்தில் மாத்தி ரம் அவரைக் காணப்போவோருக்கு அதிசயமுண்டாகும். ஒன்று யார் எந்நேரம் போனாலும் சுவாமியார் அவர்களை மலர்ந்த முகத்தோடு அருகிலிருக்கச்செய்து அவர்களுக்கு வேண்டிய நேரங் கொடுத்துச் சம்பாஷிப்பது. மற்றது இவரிருக்குமிடம் கொட்டிலேயானாலும் பெரிய சாஸ்திரி கள் வேலை செய்யுமிடம்போல புத்தகங்கள் நிறைந்ததாய் உள்ள தட்டு முட்டுக்கள் எல்லாம் ஒழுங்கு பெற வைத்த தாய் இருக்கக் காண்பது. இப்படிச் சனங்களின் மத்தி யிலே போய் குடியாய் இருப்பதினாலேதான் சுவாமிஞானப் பிரகாசருக்கு வருஷந்தோறும் நூற்றுக்கணக்கான பிற சமயிகளுக்கு தனித்தனியே வேதம்போதிக்கும் வசதி வாய்க்கின்றது. அவர்களைக் காணும்போது இவர் அவர்

EVELYN RUTNAM INSTITUTE
92
REFERENCE LIBRARY



களைத் தக்கபடி உபசரித்து ஊர்ப்புதினங்களைப்பற்றியோ சரித்திர சம்பந்தமான காரியங்களைப்பற்றியோ பேசத்தொடங்கி, மெல்ல மெல்ல வேத உண்மைகளையும் அவர்களுக்குப் போதித்துவிடுவார். மீண்டும்மீண்டும் இவரைக் காண வருவோர் கடைசியிலே சற்றாவது வேதச்சார்பில்லாமற் போகமாட்டார்கள். மந்திரம் படிப்போருக்கும் பெரும்பாலாக சம்பாஷணை ரூபமாகவே வேதத்தைப் புகுத்திவிடுவார். புதுக்கிறிஸ்தவர்கள் தம்மைக் காணவரும்போதெல்லாம் இப்படியே அவர்களைப் பக்கத்தில் வைத்துச் சுகசேமங்களை விசாரித்து வேதகாரியங்களிலே சற்றுச் சற்றாக அறிவுறுத்தி அவர்கள்பத்தியை அருட்டிவிடுவார். பிறசமயப் பிச்சைக்காரர் வரும்பொழுதும் இப்படியே பொருட்பிச்சையோடுகூட வேத அறிவென்னும் ஞானப் பிச்சையையும் அவர்களுக்குப் போட்டனுப்ப வருந்துவார்.

தருணங்கண்ட இடத்திலெல்லாம் இவ்வாறு சம்பாஷணையினாலும் பிரசங்கத்தினாலும் புத்திமதி சொல்லித் திரிவதினாலேயே சுவாமி ஞானப்பிரகாசர் யாழ்ப்பாணத்தில் வேதம் பரம்பச் செய்து, கிறிஸ்தவர்கள் அனைவருக்குள்உற்சாகம் கொடுத்து, பிறசமயிகளின்முன் நமது திருவேதம் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கச் செய்து வருகிறார் என்பது வெளிப்படை.

இற்றைவரைக்கும் இவர் கையால் தமது திருச்சபைக்கு எண்ணில்லா நன்மைகளைச் செய்துகொண்டு வந்த எம் பெருமான், இவருக்கு இன்னுமின்னுமவசியமான வரப்பிரசாதங்களைத் தந்து, சுகத்தையும் பெலத்தையும் நீடிய ஆயுளையும், தமது திருச்சபையின் கூடுதலான நன்மைக்காகவே, அளித்தருள வேண்டுமென்பதுதான் எமது பிரார்த்தனை.

# சுவாமி ஞானப்பிரகாசர் இயற்றிப்பதிப்பித்த நூல்கள்.

## போதகரூபமும் பத்திரூபமும்.

1. தெய்வீக விருந்து
2. திவ்விய பூசை மகத்துவம்
3. தபசுகாலப் பிரசங்கம்
4. மருதமடுப்பதி யாத்திரிகள் துணை (பத்தியமும் கத்தியமும்)
5. மரியாயின் ஊழியர் பூஷணம்
6. நோயாளருக்கு ஆறுதல் (பாஷாந்தரம்)
7. பிறசமயிகளுக்கு வேதபோதகக்குறிப்பிடம்
8. மோட்சபாதை (யாத்தது)
9. சற்பிரசாதநாதருக்கு நித்திய ஆராதனை
10. பத்திப் பொக்ஷம்
11. பூசைப்பரிசாரகரின் செபப்புத்தகம்
12. திவ்விய அவுஷதம் (யாத்தது)
13. மகாஞான ஒடுக்கக்கீர்த்தனங்கள்
14. மேற்றிராணியாரின் அபிஷேகத்திருச்சடங்கு (பாஷாந்தரம்)

## வேததர்க்கரூபம்.

15. பிரிவினை மதங்களும் பைபிளும்
16. சைவசித்தாந்தம் (இங்கிலிஷ்)
17. ஓர் அமெரிக்க சைவன் (இங்.)
18. மெஸ் பெல்ப்ஸ் என்பாரின் கடித விமரிசனம் (இங்.)
19. சர்வஜனப் பொதுச்சமயம் (பாஷாந்தரம்)
20. பாதிரியாருக்கு இரண்டாவது கடிதம்.

21. தமிழன் தலையிலடி
22. பிரபஞ்சவிசார நிரூபணம்
23. இரண்டு படுபொய்கள் (துண்டு)
24. ஒரு பெருங்கடமை ,,
25. இராசபாதை ,,
26. ஆத்துமம் ,,
27. சற்குரு ,,
28. கடவுளிலட்சணம் ,,
29. விக்கிரகாராதனையும் சுரூபவணக்கமும்
30. மறுபிறப்பு – ஆட்சேபம்
31. சைவராட்சேபசமாதானம்
32. பரிபூரணவஸ்து
33. உலகஉற்பத்தி
34. கிறிஸ்துவின் கடவுட்டன்மை
35. ஈடேற்றவழி
36. மறுபிறப்பு—சமாதானம்
37. புதுச்சைவம்
38. சைவரும் மச்சமாமிசமும்
39. சமய ஆராய்ச்சியும் நேர்மையும்
40. மிருகபலி ஆராய்ச்சி
41. பிள்ளையார் சரித்திர ஆராய்ச்சி
42. சுப்பிரமணியர் சரித்திர ஆராய்ச்சி
43. கிறிஸ்து சமயமும்பிறசமயங்களும் ஒத்துக்கூறுபவை (இங்கிலிஷ்)
44. கிறிஸ்து சமயத்தினும்பௌத்தசமயத்தினும்சரித்திர நோக்கு (இங்.)

## சரித்திரரூபம்.

45. தமிழரின் பூர்வசரித்திரமும் சமயமும்
46. போர்த்துக்கீசர் கால யாழ்ப்பாண அரசர் சரித்திரம் (இங்.)

47. இலங்கைச் சத்தியவேத சரித்திரம் (இங்.)
48. இருபத்தைந்து வருஷ சத்தியவேத முன்னேற்றம்—யூலனுண்டவர் காலச்சரிதம் (இங்,)
49. யாழ்ப்பாண சத்தியவேதசரித்திரசங்க்ஷேபம் (இங்.)
50. யாழ்ப்பாண வைபவவிமரிசனம்
51. போர்த்துக்கீச ஒல்லாந்தர்கால யாழ்ப்பாணச் சரித்திரம் (யாழ்ப்பாணவைபவகௌமுதியில்)
52. மருதமடுத்திருப்பதிச் சரித்திரம்
53. ஆதிகாலப் பாப்புமார் சரித்திரச்சுருக்கம்
54. இந்தியபுராதனநாகரீகமும் காலநிர்ணயமும் (இங்.)
55. தமிழருட் சாதியுற்பத்தி (இங்.)
56. அற்புதவரத்தி—அர்ச். பிலோமினு
57. ஆண்டவர் ஆய்ந்தகனி
58. வாலிபருக்கோர் மாதிரிகை
59. இரண்டு வேதவெற்றிவீரர் (பாஷாந்தரம்)
60. லூர்தில் நடக்கும் அதிசயங்கள் (பாஷாந்தரம்)
61. கதாவிநோத பூங்கொத்து

---

## திருத்திப்பதிப்பித்த நூல்கள்

1. சுகிர்த தர்ப்பணம் (யாக்கோமேகொன்சால்வேஸ் சுவாமி)
2. தேவமாதா அற்புதவரலாறு ,,
3. சுகிர்த குறள் ,,
4 நன்மரண உபகாரம் ,,
5. உவாத்தியாயருக்கும்குடியானவனுக்குந்தர்க்கம் ,,
6 யோசேவாஸ்முனிவர் சரித்திரம் (கபிரியேல்பச்சேக்குசுவாமி)
7. நவதின உற்சவம் ,,
8. செபமாலை மாதா நவநாள் ,,

9. மோட்சகபாடம் (கபித்தானு அந்தோனியுவிஸ்பு)
10. யேசுநாதசுவாமியின் தேவத்துவவிளக்கம் (M. யோசேப்புசுவாமி)
11. ஸ்திரி ரத்தினம் (யோசேப்புசுவாமியும் S. ஆசிர்வாத சுவாமியும்)
12 குஷ்டரோகரின் அப்போஸ்தலன் (T. H. தம்பிமுத்து)
13. ஞானக்கீர்த்தனங்கள்
14. சத்தியவேத போதகச் சுருக்கம்
15. லத்தீன் பாடற்புத்தகம்
16. சத்தியவேத தர்ப்பணம் 4 காண்டம் (J. இப்பொலித்து சுவாமி)
17. திருஇருதய அப்போஸ்தலன் ,,
18. ஆத்துமாக்களின் அழுகைக்குரல் (S. அந்தோனி சுவாமி)
19. பிள்ளை வளர்ப்பு 2 காண்டம் (B. மார்சலின் சுவாமி)
20. சிலுவைப்பாதை
21. அர்ச். இசிதோர் சரித்திரம் (N. பெறேறாசுவாமி)
22. அர்ச். ஒதிலியா சரித்திரம் ,,
23. இலங்கைவேத சாட்சிகள் ,,
24. விசுவாசிகளும் வேதத்தைப் பரப்பும் வேலையும்
25. ஞேமை முனிவர் ஞானம் (அ. சவரிமுத்துப்பிள்ளை)
26. பதிதருக்குத் தானுதனுதந்தனுை ,,
27. ஊசோன் பாலந்தைகதை
28. பிள்ளையார் சரித்திர ஆராய்ச்சிக் கண்டிப்புத்துண்டிப்பு (பீ. எம். யாக்கோப்பு)
29. சிவஞான விமர்சன சித்தாந்தம் (பழங்குடி)
30. தஸ்நேவிஸ்மாதா தோத்திர ஜீவரத்தினம் (ரூபின் மொறூல்)

---



EVELYN INSTI UT
REFERE E
LIBRARY

EVELYN RUTNAM INSTITUTE
92
REFERENCE
LIBRARY
JAFFNA



THE EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE
LIBRARY
COLOMBO